ரூ. 8.00



மக்கள் சிந்தனை

சமய சமுதாய இலக்கிய திங்களிதழ்

திருவள்ளுவர் ஆண்டு 2046 வைகாசி - ஆனி
மே - ஜூன் 2015

சிறப்பாசிரியர் : தவத்திரு குன்றக்குடி பொன்னம்பல அடிகளார்

மக்கள் சிந்தனை

நிறுவனர் : தவத்திரு குன்றக்குடி அடிகளார்

திருவள்ளுவர் ஆண்டு 2046 மாதம் : வைகாசி - ஆடி
மலர் : 30 இதழ் : 5 -7

வழிகாட்டும் வள்ளுவம்

ஒரு கல்லூரியில் நடந்த நிகழ்வு :

ஒரு மாணவர் கல்லூரி வகுப்பறை நோக்கி நடந்து வருகின்றார்! திடீரென மழைத்துளிகள் விழ ஆரம்பித்தன. வலுத்த மழைத்துளிகளில் மாணவர் நனைந்து விட்டார்! மாணவரின் சட்டை முழுவதும் நனைந்து விட்டது. நனைந்த சட்டையை வகுப்பறையில் உலர்த்தப்போட்டு, வகுப்பறையில் பாடத்தை உற்று கவனித்தார். இதைக் கவனித்த கல்லூரி முதல்வர் பீட்டர்பெக் துரை, அந்த மாணவரைக் கண்டித்தார்! வகுப்பறையில் சட்டையின்றி அமர்வது அநாகரீகம்! மாணவருக்கு எட்டணா அபராதம் விதித்தார். மாணவர் கண்கலங்கி நின்றார். எட்டணா இருந்தால் ஒரு புதிய சட்டை வாங்கி விடுவேன். மாற்றுச் சட்டை இல்லாத காரணத்தால்தான் இப்படி நிகழ்ந்தது என்றார். உடனே முதல்வர் பீட்டர்பெக் துரை மாணவருக்கு புதிய சட்டை வாங்கிக் கொடுத்தார். எட்டணா அபராதத்தையும் அவரே கட்டி விட்டார். இந்த நிகழ்வு நடந்த சில ஆண்டுகளுக்குள் வறுமை வாய்ப்பட்ட அந்த மாணவர் படித்தார், உயர்ந்தார்!

லண்டன் பிரிவி கவுன்சிலர் என்ற உயர்ந்த நிலைக்கு வந்தார்! லண்டன் மாநகரம் சென்றபோது தனக்கு உதவிய ஆசிரியர் பீட்டர்பெக் துரையை நேரில் சந்தித்தார்! லண்டன்

பிரிவி கவுன்சிலராய் உயர்ந்துள்ள தன் மாணவர் நிலைகண்டு ஆனந்தப்பட்டுக் கட்டித்தழுவி விருந்து நிகழ்ச்சி ஒன்றை ஏற்பாடு செய்தார்!

பீட்டர்பெக் துரை அந்த நிகழ்ச்சியில், மழையில் நனைந்து சட்டையின்றி இருந்த இந்த மாணவரின் இப்போதைய நிலைக்கண்டு ஆனந்தக் கண்ணீர் வடித்து உரையாற்றினார்! இந்த மாணவர்தம் கைப்பெட்டியில் பொக்கிஷமாய் பாதுகாத்து வைத்திருந்த தன் ஆசிரியர் வாங்கிக் கொடுத்த பழைய சட்டையை அனைவருக்கும் காட்டி,

எழுமை எழுபிறப்பும் உள்ளுவர் தங்கண்
விழுமந் துடைத்தவர் நட்பு.

என்ற குறளுக்கு இலக்கணமாய்த் தன் ஆசிரியர் செய்த உதவியை மறவாத அந்த மாணவர் ஆங்கில உரை கேட்டு ஆங்கிலேயர்களே மயங்கி நின்றனர்! அவர்தாம் சில்வர்டங்க் ரைட் ஹானரபல் சீனிவாச சாஸ்திரிகள்.

அற்புதமான ஆங்கில உச்சரிப்பால் மயங்கி வெள்ளையர்கள் "சில்வர்டங்க் சீனிவாச சாஸ்திரிகள்" என்று அவரைப் பாராட்டினர். எனவே, நன்றி மறவாத குணம் எப்போதும் நம்மிடம் இருக்க வேண்டும்!

ஒரு மாணவன் எல்லோரிடமும் பண உதவி கேட்டான்! யாரும் தரவில்லை! உடனே கடவுளுக்கே கடிதம் எழுதினான். "கடவுளுக்கு வணக்கம். எனக்கு அவசரமாய் ஒரு நூறு ரூபாய் பணம் தேவை! பலரிடம் கேட்டேன்! எவரும் உதவவில்லை! நீயாவது உதவி செய்!" என்று கடிதம் எழுதிவிட்டு, தன் உள்ளூர் போஸ்ட்மாஸ்டர் முகவரிக்கு அஞ்சல் அட்டை அனுப்பி விட்டார்! அஞ்சல் அட்டையை படித்த போஸ்ட்மாஸ்டர் பாவம் யாரோ ஒரு ஏழை மாணவர் உதவிகேட்டு எழுதி உள்ளார்! கடவுள் முகவரி என்று நம்முடைய முகவரிக்கு அனுப்பி இருக்கின்றார் என்று நினைத்தார். தம் பையில் கைவிட்டார்! எண்பது ரூபாய்

இருந்தது! அப்படியே அந்த மாணவருக்கு எண்பது ரூபாய் பணத்தை அனுப்பி விட்டார்! பணம் கிடைத்த மகிழ்ச்சியில் கடவுளுக்கு நன்றி தெரிவித்துப் பதில் கடிதம் எழுதினான் மாணவன். "கடவுளுக்கு நன்றி! உரிய நேரத்தில் பணம் கிடைத்தது! இனிமேல் பணத்தை அனுப்புவதாக இருந்தால் உள்ளூர் தபால் அலுவலர் மூலம் அனுப்ப வேண்டாம்! அவர் தாங்கள் அனுப்பும் பணத்தில் 100 ரூபாய்க்கு 20 ரூபாய் எடுத்துக் கொண்டார்" என்று கடிதம் எழுதி இருந்தான்!

இதைத்தான்,

> உதவி வரைத்தன்று உதவி உதவி
> செயப்பட்டார் சால்பின் வரைத்து

என்றார் திருவள்ளுவர்!

செய்யப்படும் உதவிகள் ஏற்றுக்கொள்ளும் மனிதர்களைப் பொறுத்ததே!


உலகப்புகழ் பெற்ற பாப் பாடகர் வில்லியம் ரிச்சர்ட்ஸ் வங்கதேசத்து அகதிகள் முகாமில் ஆறுதல் கூறச் சென்றார். அகதிகள் சீழ்பிடித்த சிரங்குகளுமாய், புண்களுமாய் வலியோடு துடித்துக்கொண்டிருந்தனர். அதில் ஒரு குழந்தை சீழ்பிடித்த சிரங்கோடு துன்பப்பட்டது. அந்தக் குழந்தையின் கையை யாரோ மிதித்துவிட அந்தக் குழந்தை வலியால் அலறியது. அருவெறுப்போடு அந்தக் குழந்தையைத் தூக்கிய அவர் அலறிய அந்தக் குழந்தையை மார்போடு அணைத்துக் கொண்டார்! குழந்தையின் அழுகை அடங்கியது.

அன்புடன் வலியை வலிமையால் தான் உணர்ந்து கொண்ட நிகழ்வு அது என்றார்! தன்தோளில் முகம்புதைத்துக் கிடக்கும் அந்தக் குழந்தையை அணைத்தவாறு அவர் வெளிறிய முகத்துடன் காணப்படும் அந்தப் புகைப்படம் தான் "போற்றும் பொக்கிஷம்" என்றார்! அன்பைப் பற்றி நான் தெரிந்து கொள்ள வேண்டியது நிறையவே இருக்கின்றது. என் படுக்கை அறைக்கும்,

குளியல் அறைக்கும் இடையில் தொங்கிக்கொண்டிருக்கும் அந்தப் புகைப்படம் என் நினைவு இருக்கும்வரை அழிந்து போகாத பத்திரமான இடத்தில் அழியாத ஓவியமாக இருக்கின்றது என்றார்.

அன்பின் வழியது உயிர்நிலை(உயர்நிலை) என்பதன் ஓவியம் தான் அந்த புகைப்படம். வாழ்வில் அன்பிற்கும், நன்றிக்கும் நட்புக்கும் எல்லாநிலைகளிலும் வழிகாட்டிக் கொண்டிருப்பதுதான் வள்ளுவத்தின் தடம்! அந்தத் தடத்தை ஆழ அகலமாகப் பின்பற்றுவோம். வாழ்வைப் பொருள் உடையதாக்குவோம்!

என்றும் வேண்டும் இன்பம் அன்பு





வெற்றி பெறுவதற்கு நிறைந்த விடாமுயற்சியையும், பெரும் மன உறுதியையும் நீங்கள் கொண்டிருக்க வேண்டும். விடாமுயற்சி பெற்றவன் சமுத்திரத்தையே குடித்துவிடுவேன், எனது சங்கல்பத்தால் மலைகள் நொறுங்கி விழுந்தாக வேண்டும் என்று சொல்கிறான். அத்தகைய ஆற்றலை, அத்தகைய மனஉறுதியை நீ பெற்றிடு. கடுமையாக உழை. உனது குறிக்கோளை நீ அடைவாய்.

– விவேகானந்தர்

அச்சம் அறியாமையிலிருந்துதான் எப்போதும் பிறக்கிறது. எனவே அறியாமையை முதலில் நீக்க வேண்டும். – எமர்சன்

காலத்தைத் தள்ளிப் போடாதீர்கள். தாமதத்தின் முடிவுகள் மிக ஆபத்தானவை. – ஷேக்ஸ்பியர்

உலகத்திலேயே மிகச் சிறந்த சீர்திருத்தக்காரன், தன்னைச் சீர்திருத்திக் கொள்ளுபவனே. – பெர்னாட்ஷா

91

மதுவை ஒழிப்போம்

(தவத்திரு பொன்னம்பல அடிகளார்)

தாய்ப்பால் ஊட்டி வளர்க்க வேண்டிய நான்கு வயதுப் பிஞ்சு மழலைக்கு மதுவினை ஊட்டி வேடிக்கை பார்க்கின்றனர் வெறிபிடித்த சிலர்! இதயம் உள்ள எந்த மனிதரும் காணக்கூசும் கொடூரம் அரங்கேறியது, ஏதும் அறியாத சிறுவன் மதுவைக் குடிக்கும் கொடிய காட்சி! இதயமற்ற மனிதர்களின் வெறிபிடித்த செயல்!

ஒரு பள்ளிமாணவி தன் சக மாணவியரோடு கடைவீதிக்குச் சென்று மதுஅருந்தி மயங்கி விழுகின்றார்! தன்னிலை மறந்து அருவெறுக்கத்தக்க வார்த்தைகளால் அனைவரையும் திட்டித் தீர்க்கின்றார்! இது கோவை வீதியில் நடந்த கொடூரம்!

இன்னொரு பள்ளியில் மதிய உணவு இடைவெளிக்கு, வெளியில் சென்று வந்த சில மாணவர்கள், மது அருந்திவிட்டு வந்து சகமாணவர்களோடு வம்பு இழுத்துச் சண்டையிடுகின்றனர்! கண்டித்த தலைமை ஆசிரியரை தாக்க வருகின்றனர்!

என்ன கொடூரம் இது!

வரிசையாய் நிகழ்வுகள்! பிஞ்சு உள்ளங்களில் மது எனும் நஞ்சு விதைக்கப்படுகின்றது!

இரவு பகல் என்று பேதம்பாராது மதுக்கடை வாசல்களில் மயங்கி நிற்கும் இளைஞர்கள்! தம்கணவனின் மது போதைக்காகத் தம் மங்கலநாணைக்கூட இழந்து தவிக்கும் மகளிர்! குடும்பங்கள் அமைதியின்றி தவிக்கின்றன! இளைய தலைமுறை இந்த அதிர்ச்சிகளால்தாம் வளர்க்கப்படுகிறார்கள்! வறுமையின் கொடுமையைவிட மதுவின் கொடுமை இக்குடும்பங்களைச் சீரழிக்கின்றது!

மதுவின் தீமையை விளக்கி ஒரு ஆசிரியர் பாடம் நடத்துகின்றார்!

இரண்டு குவளைகளில் ஒரு குவளையில் தண்ணீரும், ஒரு குவளையில் மதுவையும் வைத்து இரண்டு குவளைகளிலும் புழுவினை விட்டார்! மது இருந்த குவளையில் விழுந்தபுழு துடிதுடித்து மடிந்தது! தண்ணீர் இருந்த குவளையில் புழு மிதந்து வந்தது! இதிலிருந்து என்ன கற்றுக்கொண்டாய் என்று மாணவனிடம் ஆசிரியர் கேட்டார்.

"மதுக்குடித்தால் வயிற்றில் உள்ள புழுக்கள் மடிந்து விடும்" என்றான்! மதுவின் தீமைகளை உணராத சமூகம் உருவாகிக் கொண்டிருக்கிறது! மதுவை விலக்க அரசு ஆவன செய்ய வேண்டும். மதுவைத் துறக்க இளைஞர்கள் தயார் ஆக வேண்டும். மதுவை மறக்க மானுடம் தயார் ஆக வேண்டும்!

மதுவின் போதையில் இருந்து இளையதலைமுறையை மீட்போம்!



பலரும் கூடி வாழவேண்டுமாயின்
முரண்பாடுகளை – மாறுபாடுகளைப்
பெரிதுபடுத்தாமல் – விரிவுபடுத்தாமல் பழகக்
கற்றுக்கொள்ள வேண்டும். எந்தச்
சூழ்நிலையிலும் அவர்கள் மீதுள்ள மதிப்பீட்டைக்
குறைத்துக்கொள்ளக் கூடாது. மனமுறிவுகளை
ஏற்படுத்திக்கொள்ளக்கூடாது என்ற வாழ்வியல்
உண்மையே சமுதாய உருவாக்கத்திற்குத் துணை செய்யும்.

– அருள்நெறித்தந்தை

தேய்க்காமல் இரத்தினம் பிரகாசம் அடைவதில்லை
சோதனைகள் இல்லாமல் மனிதன் பூரணம் அடைவதில்லை.

– சீனப்பழமொழி

91/1

மனிதநேய விஞ்ஞானி!

(தவத்திரு பொன்னம்பல அடிகளார்)



அவர் பிறந்தது இரட்டகுடி!

ஆனால் அவரின் தாய்வீடு குன்றக்குடி!

ஆம்! விஞ்ஞான மேதை டாக்டர் பாலகிருஷ்ணன் தாய்வீடு குன்றக்குடி!

உயர்ந்தவர், தாழ்ந்தவர், ஏழை, பணக்காரர் என்று பேதம் பாராது எல்லோரையும் அன்பொழுக அழைத்துத் திருமடத்தின் கதவுகளை எல்லா மக்களுக்கும் திறந்துவிட்ட நம் மகாசன்னிதானம் குன்றக்குடி அடிகள் பெருமானின் இதயத்தைத் தொட்டவர் டாக்டர் பாலகிருஷ்ணன்!

பெரியபுராணம் காட்டிய அப்பூதி அடிகள், அந்தணர் குலத்தை சார்ந்தவர்: திருநாவுக்கரசர்மேல் தீராதபக்தி கொண்டவர்! சாதிவேறுபாடுகளைக் கடந்த சமயத்தைப் பெரியபுராணம் காட்டியது!

அப்பூதி அடிகள் தாம் செய்யும் எல்லா அறச் செயல்களுக்கும் திருநாவுக்கரசர் பெயரினைச் சூட்டினார்!

தண்ணீர்ப்பந்தல் முதலிய அறச்செயல்கள் அனைத்திற்கும் திருநாவுக்கரசர் பெயர் சூட்டினார். தம் எல்லா பிள்ளைகளுக்கும் திருநாவுக்கரசர் பெயர் சூட்டினார். தாம் பக்திகொண்டிருந்த திருநாவுக்கரசரை அவர்தான் திருநாவுக்கரசர் என்று அறியாத நிலையில் அப்பூதிஅடிகள் சந்திக்கின்றார். திருநாவுக்கரசர் தாங்கள் செய்யும் அறச்செயல்களுக்கு தங்கள் பெயரைச் சூட்டாமல் ஏன் வேறு ஒருவர் பெயரை சூட்டினீர்கள்? என்று கேட்டார். நஞ்சு ஊட்டப்பட்டும், யானையால் இடறப்பட்டும் சூலை நோய்க்கு ஆளாகியும் அளவிலாத் துன்பங்களைச் சந்தித்த அவரா வேறு ஒருவர்? என்று கேட்டு வெகுண்டார்! பிறகு வந்திருப்பவர் திருநாவுக்கரசர் என அறிந்ததும் அளவிலாப்பற்றும் ஆறாத அன்பும் கொண்டு பணிவிடைகள் செய்தார். திருநாவுக்கரசர் அமுது உண்ண வாழை இலை அரிந்து வருமாறு அப்பூதிஅடிகள் தம் மகன் மூத்த திருநாவுக்கரசிடம் ஆணையிட்டார். வாழைஇலை அரிந்து வரச்சென்ற குழந்தை விஷப்பாம்பு தீண்டி உயிருக்குப் போராடியது. உயிருக்கு போராடிய நிலையிலும், தம்வீட்டுக்கு வந்த பெரியவர் உணவு உண்பதில் தாமதம் ஏற்படக்கூடாது என்று வாழை இலையை வீடு கொண்டுவந்து சேர்த்து, மயங்கி விழுந்தது! அந்தக் குழந்தையை நினைத்து பண்டு பழுத்த முழுமைத் தவம் இந்த சிறிய உடலில் புகுந்ததோ எனச் சேக்கிழார் கூறினார்!

மூத்த திருநாவுக்கரசு வாழைஇலை அரிந்து வரச்சென்றபோது "நல்ல தாய் தந்தை ஏவ நானிதுசெய்யப் பெற்றேன்" என்று கூறிக்கொண்டே சென்றான். "நல்ல தாய் தந்தை!" என்ற அடைமொழியை யார்தருவார்?

பள்ளி, கல்லூரிகள், பல்கலைக்கழகங்கள் பட்டங்கள் பெற்றுத்தரும்! நல்லதாய் தந்தை என்ற பட்டத்தை அவர்களின் மக்கட்செல்வங்கள்தாம் பெற்றுத்தர முடியும்!

அதனால்தான் திருவள்ளுவர் மக்கட்பேற்றை "அறிவு அறிந்த மக்கட்பேறு" என்று அழைத்தார்!

மூத்த திருநாவுக்கரசு தம் தாய்தந்தையை நல்ல தாய் தந்தை என்று அழைத்தது மட்டுமல்லாமல், தன்னையே தந்து நல்ல தாய் தந்தை என்ற பெருமையை தம் பெற்றோர்களுக்குத் தேடித் தந்தவர்!

அப்பூதிஅடிகள் திருநாவுக்கரசர் மேல் கொண்ட பக்தி உணர்வைப்போல் நம் மகாசன்னிதானத்திடம் ஆழ்ந்த பக்தியும், தொண்டின் தோழமையும் கொண்டவர் டாக்டர் பாலகிருஷ்ணன்!

அவரின் அறிவுஅறிந்த மக்கள் டாக்டர் ஸ்ரீதர், பிரபாகர், சங்கர் அதே அன்பினை திருமடத்தின்பால் காட்டுகின்றனர். ஏறத்தாழ நாற்பதாண்டு காலம் திருமடத்தின்பால் தொடர்பும், அன்பும் கொண்டிருப்பது வெறும் தொடர்பு அல்ல!

தொண்டால் உயிர்க்கு ஊதியம் இல்லை என்ற திருமடத்தின் தொண்டுகளில் தம்மை கரைத்துக் கொண்டவர். சுமார் நாற்பதாண்டுகளுக்கு முன்பு குன்றக்குடிக்கு அருகே கொர்ரட்டி என்ற கிராமத்தின் குடிசைகளில் மர்மமாய் திடீர் திடீர் என்று தீப்பிடித்தன. மக்கள் செய்வதறியாது திகைத்து நின்றனர். நம் மகாசன்னிதானம் காரைக்குடி மைய மின் வேதியியல் ஆய்வகத்தோடு தொடர்புகொண்டார். குடிசைகள் மர்மமாய் ஏன் தீப்பிடிக்கின்றன? என்று ஆய்வு செய்யக் கோரினார்கள். குடிசைகள் தீப்பிடித்ததன் இரகசியத்தைக் கண்டறிந்து சொல்லிவிட்டு விஞ்ஞானிகள் விடைபெறும்பொழுது, நம் மகாசன்னிதானம் டாக்டர் பாலகிருஷ்ணனிடம் கூறினார்கள். "இன்னும் உங்கள் வேலை முடியவில்லை! குடிசைகளின் மேற்கூரைகள் எரிந்ததைக் கண்டறிந்து சொல்லி விட்டீர்கள்! இனி, குடிசைகளுக்கு உள்ளே இருக்கும் அடுப்புகள் ஏன் எரியவில்லை என்று ஆய்வு செய்ய வேண்டும்" என்று கேட்டார்கள்! அதன்விளைவு War Against to Poverty! வறுமையை எதிர்த்த

போரில் அறிவியலும், ஆன்மிகமும் கைகோத்துக் கொண்டு பணியாற்றினார்கள்!

குன்றக்குடி கிராம வளர்ச்சிக்கு, கிராமத்திட்டக்குழு உருவாகியது! மகாசன்னிதானம் நெறிப்படுத்த, அரசு அலுவலர்கள், வங்கி அலுவலர்கள், விஞ்ஞானிகள் மற்றும் பொதுமக்கள் அடங்கிய கிராமத் திட்டக்குழு மலர்ந்தது! அதன் தலைவராக இன்றுவரை டாக்டர் பாலகிருஷ்ணன் தம் பங்களிப்பைச் சிறப்பாகச் செய்து வருகின்றார். 80 வயதிலும் இடையறாது மக்கள் நலனுக்காக உழைத்துக் கொண்டிருக்கின்றார்.

இன்றும் ஏழை எளியோர் பயன்பெறும் வகையில் பெண்கள், இளைஞர்களுக்கு சுயதொழில் வேலைவாய்ப்புப் பயிற்சிகளை அளித்து மக்கள் கல்வி நிலையத்தின் தலைவராகச் சிறப்புடன் செயலாற்றி வருகின்றார். Learn and Earn, Earn and Learn – கற்றுக்கொள், பொருள்ஈட்டு என்று நவீன சுயதொழில் வேலைவாய்ப்பு மனிதவள மேம்பாட்டுத்துறையுடன் இணைந்து நமது அறக்கட்டளையின் கீழ் செயல்படும் மக்கள் கல்வி நிலையத்தின் மூலம் 15 ஆண்டுகள் சிறப்புடன் நடத்தி வருகின்றார்!

எல்லாவற்றுக்கும் மேலாக பேரிடர்க்காலங்களில் அவர் திருமடத்தோடு இணைந்து ஆற்றிய தொண்டுகள் அளப்பரியவை! சுனாமி நம்மை சுழற்றிப்போட்டபோது, சுனாமி தாக்கிய சிலமணி நேரத்தில் நம்மை நேரில் சந்தித்து, சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவிகள் செய்ய வேண்டும் என்று கூறினார்! உடனே நாம் அப்பொழுது நாகை மாவட்ட ஆட்சிப்பொறுப்பில் இருந்த டாக்டர் ராதாகிருஷ்ணனிடம் கேட்டபொழுது, டாக்டர் இராதாகிருஷ்ணன் கூறினார்! பணம், மருந்து, உணவு தேவையில்லை! சுனாமியால் மடிந்த பிணங்களைப் புதைக்க ஆட்கள் தேவை. இதைச்சொன்ன அடுத்த நிமிடத்தில் முண்டாசுகட்டிக் கொண்டு அரைக்கால் சட்டையோடு நம்மோடு புறப்பட்ட முதல் மனிதர் (அப்பொழுது 70 வயது) இளைஞர் டாக்டர் பாலகிருஷ்ணன்! நம்மோடு குன்றக்குடியைச்

சேர்ந்த நூறு பேர் களப்பணியாற்றினார்கள், வேளாங்கண்ணி தேவாலயத்தின் வாயிலில் அழுகி, உப்பிப்போன சடலத்தை அரைக்கால் சட்டை அணிந்த இளைஞர் டாக்டர் பாலகிருஷ்ணன் தம் தோள்களில் தூக்கிச் சென்ற காட்சி இன்னமும் விழித்திரையில் நின்று கொண்டிருக்கின்றது. அவருக்குள் மறைந்திருக்கும் தொண்டு உணர்வு அளப்பரியது. எழுதிக்காட்ட முடியாது!

எல்லாப் பேரிடர்க் காலங்களிலும் சமூகப்பணியாற்றும் நமக்குத் தோளோடு தோள்கொடுத்து துணைநின்றவர். குடந்தைப் பள்ளித் தீ விபத்து, சிவகங்கை மாவட்டத்தைத் தாக்கிய கடும் வெள்ளப் பாதிப்பிற்கு நிவாரண உதவி, கார்கில் நிவாரணநிதி அளித்தல், குஜராத் பூகம்ப நிதி அளித்தல் என, எல்லா பேரிடர்க் காலங்களிலும் தொண்டராய் நம்மோடு துணை நின்றவர் டாக்டர். பாலகிருஷ்ணன்! மகாசன்னிதானத்தோடு நட்பு ஏற்பட்ட நாள்தொட்டுத் தினந்தோறும் அதிகாலையில் மகாசன்னிதானம் டாக்டர் பாலகிருஷ்ணன் அவர்களோடு தொலைபேசி வழி உரையாடி கிராம வளர்ச்சிப்பணிகளை விவாதித்துச் செயல்வடிவம் ஆக்குவார்கள். மகாசன்னிதானத்தின் வாழ்நாள் முழுவதும் அவர்களிடம் நட்பும், அன்பும் கொண்டிருந்தார் டாக்டர் பாலகிருஷ்ணன்! மகாசன்னிதானம் பரிபூரணம் அடைந்தபோது அவர் அருகில் இருக்கின்ற நற்பேறு அவருக்கு வாய்த்தது மகாசன்னிதானத்தின்பால் டாக்டர் பாலகிருஷ்ணன் கொண்ட மாசு மறுவற்ற அன்பின் அடையாளம்! மகாசன்னிதானம் விட்டுச்சென்ற பணிகளை நாம் தொடரத் தொடர்ந்து துணை நிற்கின்றார்! குன்றக்குடித் திருமடத்தோடு தம்மை தொண்டால் பிணைத்துக் கொண்டிருக்கின்றார் டாக்டர் பாலகிருஷ்ணன்!

அறிவுப் பணியை தொண்டின் திருப்பணியாய் ஆற்றிவரும் 80 ஆண்டு நிறைவு காணும் டாக்டர் பாலகிருஷ்ணன் நூறு ஆண்டு காண வாழ்த்துகின்றோம்!

வாழ்க விஞ்ஞானி டாக்டர் பாலகிருஷ்ணன்!

(சென்ற இதழ்த் தொடர்ச்சி)

திருவாசகத் தேன்

(தவத்திரு குன்றக்குடி அடிகளார்)

தனித்துணை

இந்தப் பிறப்பு, துன்ப நீக்கத்திற்காகவே! துன்பத்தின் காரணமாய அறியாமை நீக்கத்திற்காகவே! ஆயினும் உடலுறு வாழ்க்கையில் உயிர் உறும் துன்பம் தாங்கொணாதது; உள்ளவாறு உணரின் தாங்கவே இயலாதது. இத்துயர் அனுபவத்தின் விளைவே – தாக்கமே திருவருட் சிந்தனை!

இறைவன் – சிவபெருமான் உயிருக்கு வாய்த்த தனித்துணை! "தனி" என்ற அடைசொல் சிறப்புப் பற்றியது. உயிருக்கு ஈடும் எடுப்பும் இல்லாத துணையாதலின் "தனித்துணை" என்றார். உயிர் சந்திக்கும் துணைகள் பலப்பல உண்டு. தாயினும் சிறந்த துணை ஏது? ஆயினும் தாய் காலத்தினால் பிரிக்கப்பட்டு விடுகிறாள். இடம், தொலைவு நட்புத் துணையினைப் பிரித்து விடுகிறது. நண்பரெனக் கொள்பவர்களில் பலர் கொடுத்தல் குறைபடும்பொழுது பிரிவர். ஆனால், இறைவன் – சிவன் பிரிவதில்லை. இறைவனுக்கும் உயிருக்குமுள்ள உறவு குறியெதிர்ப்பு இயலானது அல்ல; தன்னலமற்றது. உயிரின் ஆக்கத்திற்காக இறைவன் தொடர்பு. கடவுள் – உயிர் இரண்டுமே காலங்கடந்தவை. ஆதலால், காலத்தால் பிரிவு நிகழ வாய்ப்பு இல்லை. இறைவன் உயிர்க்குயிரதாக இருப்பதால் இடத்தால் பிரிவும் இல்லை. அதுமட்டுமல்ல. "நரகொடு சொர்க்கம் நானிலம் புகினும்" இறைவன் பிரிவதில்லை. இறைவன் சொர்க்கத்தில் வெளிப்பட்டும் நரகத்தில் மறைந்திருந்தும் அருள் செய்வான். தாய், மருத்துவத்திற்கு ஆளாகின்ற குழந்தைக்கு மறைந்தே இருப்பாள். பிரியாதது மட்டுமே தனித்துணைக்கு உரிய சிறப்பன்று. உற்றுழி உதவுதலில் இறைவன் தனித் துணையேயாம். நோய்க்கு மட்டுமல்ல; நோயின் மூலத்திற்கும் மருத்துவம் செய்து காப்பாற்றுபவன் இறைவன். பொன்னும் பொருளும் போகமும் தந்தருளி மேலும், திருவையும் சேர்த்து வைப்பவன். ஆதலால் அவன் உயிர்க்குத் தனித்துணை ஆயினன்.

தனித்துணையாகிய இறைவன் ஆட்கொண்டருள, வான்பழித்து இம்மண்ணிற்கு வந்தருள்கின்றான்! இல்லை, இல்லங்கள் தோறும் தேடி எங்கே என்று வந்தருளி நிற்கின்றான். இறைவன் வந்ததைக் கண்டும் காணாமலும் பணியில் ஈடுபட்டிருப்பதாகப் பாவனை காட்டினேன்! நிமிர்ந்து கூடப் பார்க்கவில்லை! ஆன்மா இருக்கிறது! இறைவன் நிற்கிறான். திருவடி நோக நின்றருள் செய்கின்றனன். நாழிகைகள் ஓடுகின்றன; நாட்கள் ஓடிக்கழிகின்றன. ஆயினும் இறைவனை நிமிர்ந்து பார்க்கும் உளப்பாங்கு வரவில்லை. "வருக" - என்று வணங்கி அழைக்கவும் மனம் ஒருப்படவில்லை. முகமன் கூற, உபசரிப்பு செய்ய எழுச்சி கொள்ளவில்லை. இறைவன் சும்மா இருப்பானா? இறைவன் தான் வந்திருப்பதை அறிவிக்கத் தன் திருவடிகளை நிலத்தில் தோயச் செய்து தாளந்தப்பாது தூக்கி எடுத்து வைக்கின்றான். அடக்கமாகக் காலை மாற்றுகிறான். ஆயினும் ஒலி கேட்கிறது. அந்தச் சூழ்நிலையிலும் நான் கண்டுகொள்ளவில்லை.

இறைவன் செருமல் ஒலி செய்கிறான். அப்போதும் நான், "நான்" தான்! அசைந்து கொடுக்கவில்லை. நான் என்ன சாமான்யனா? தலை நிறைய மூளை இருக்கிறது; அறிவு இருக்கிறது. பெற்றிருப்பது அறிவா? அறியாமையா? அது போகப் போகத் தெரியும்! சாயம், வெளுத்துப் போகக் கூடியதுதான். ஆயினும் ஆணவம் ஆட்டிப் படைக்கிறது! தலையால் நடந்தேன்! அம்மையார் நடந்த நடையல்ல! அது தலைக்குச் செய்த நடை! அம்மையார் நடை தவம் செய்த தவம்! ஆனால், நான் நடந்ததோ தருக்கி நடந்த நடை! எனக்குத் துணை எது? வினைதான் துணை! வினை பெருக்கி வினையால் அழியும் அவலத்திற்கு ஏது மருந்து? முற்றாகத் தற்கொலைக்குச் சமம்!

வினை செய்தல் உயிரியற்கை! மனம், உடல், வாக்கால் இடையறாது வினை செய்தலே உயிரியற்கை, வினை செய்தலும் வேண்டும். வினை செய்தலைத் தவிர்த்தலும் இயலாது; கூடாது. உயிரியற்றும் வினை உயிர்க்கு மருந்தாக அமைதல் வேண்டும். தண்ணீரால் உடலைக் கழுவுதலும அவசியம். ஆயினும் உடன் துடைத்தலும் அவசியம். அதுபோல் வினை செய்தலே உயிர் வாழ்க்கை; வினை செய்தலே துன்ப நீக்கத்திற்கு மருந்து. எப்போது வினை செய்தல் துன்பமாகிறது? எப்போது மருந்தாகிறது? வினை செய்தலைத் தவமாகக் கொண்டால் துன்பம் இல்லை; துயரில்லை. வினை செய்தலை வாணிகமாக்கக்கூடாது. அறவிலை வாணிகமும் தீதே: வினை செய்தல்

வழி, செருக்குக் கொள்ளுதல் ஆகாது. புகழ் வேட்டலும் கூடாது."பொன் வேண்டேன்; புகழ் வேண்டேன்" என்பது மாணிக்கவாசகர் வாக்கு. "வீடும் வேண்டா விறலின் விளங்கினார்" என்பது சேக்கிழார் வாக்கு. திருவாசகம் முழுதும் பாழ்த்த பிறப்பறுத்தலை நோக்கமாகவுடையது! அதுவும் வீடுபேறு கருதியல்ல! கூத்தடையானைப் பாடிக் களிப்புறுதலுக்கேயாம்; என்றும் இறைவனுக்கு அடிமைத் தொண்டு செய்தலுக்கேயாம்.

உயிர், வினை செய்தலை நோன்பாகக் கருத வேண்டும். தனக்கென முயல்வது நோன்பல்ல. பிறருக்கென முயல்வதே நோன்பு. உயிர்கள் செய்யும் பணிகள் பெருந்தன்மைக்குச் சான்று அன்று. அவை கடமை. இந்தப் பரந்த உலகில் வாழ்தலுக்குரிய குடிக்கூலியே தொண்டு, சேவை. வினை செய்க! வையகம் பயனுறச் செய்க!

இறைவன் புறத்தே காணும் துணையல்ல. அகநிலைத் துணை; உயிர்க்குயிரதாக நிற்கும் துணை; மனத்திற்கே துணை; உயிர், மனம் வழியேதான் எண்ணுகிறது; இயங்குகிறது. வாழ்க்கையின் முதலும் முடிவுமாகிய கருத்தை உருவாக்குவதே மனம். "மனத்துள் நின்ற கருத்தானை" என்பது தேவாரம். மனமே உலகை நோக்குகிறது; செய்திகளைச் சேகரிக்கிறது; தேவைகளை நிர்ணயிக்கிறது; நிர்ணயித்த தேவைகளை அடைய முயற்சி செய்கிறது. உயிர்க்கு மனத்தொடு புத்தி, சித்தம், அகங்காரம் என்ற அகநிலைக் கருவிகளும் உண்டு. ஆயினும் மனமே முதல் வாயில்; மனமே முதற்கருவி. மனம் விரும்பினால் புத்தி, சித்தம், அகங்காரம் ஆகிய கருவிகளையும் பயன்படுத்தலாம். மனம் தனித்து இயங்காது. புத்தி, சித்தம், அகங்காரம் ஆகிய கருவிகளைப் பயன்படுத்திச் செய்பவை சிறப்பாக அமையும். மனம் மட்டுமே இயங்கினால் செயற்பாட்டில் உணர்ச்சியும் எழுச்சியுமே மிஞ்சும். மனம் மட்டுமே செயல்படும் நிலையில் உள்ள மனிதன் பரபரப்புடையவனாக இருப்பான்; உணர்ச்சி வசப்படுவான்; ஆத்திரப்படுவான்; தீமை செய்து கொள்வான். மனம் வாழ்நிலையின் தொடக்கமாதலால் அந்த மன நிலையிலேயே இறைவன் துணையாக அமைந்து வழிகாட்டுகிறான்; வழி நடத்துகிறான். ஆனால், பலர் அந்த மனத்தின் அறிவுறுத்தலை, மனச் சாட்சியின் குரலை மதிப்பதில்லை. எடுத்துக்கொள்வதில்லை. மனச்சாட்சியின் குரல், ஆன்மாவின் ஆணவ எடுப்பில் எடுபடாமல் போகிறது. பின் காலம் செல்லச் செல்லப் பட்டறிவின் வழியில்தான் மனச்சாட்சி அங்கீகரிக்கப்பெறுகிறது. அவ்வழி நடக்கும் வாழ்க்கையும் தொடங்குகிறது. இதுவே சமய வாழ்க்கையின் தொடக்கம்.

இந்த நிலைக்கு உயிர்கள் வரும் வரையில் இறைவன் உயிர்களைக் கைவிடமாட்டான்! உயிர் செய்யும் துரிசுகளுக்கு உடந்தையாக இருந்து உடன்போய் பிழைகளைப் பொறுத்தாள்வான்; பின் பிழைகளைத் தவிர்க்கவும் கற்றுத்தந்து, பிழைகளைத் தவிர்த்து வாழும் வாழ்நிலையை அருள்வான். ஆணவத்துடன் இரண்டறக் கலந்து முனைப்புடன் வாழும் உயிர்களை – பிழை காணாது பால் கறக்கும் சிலர் பிழுக்கையை ஒதுக்கிப் பாலினை கொள்வதைப் போல ஆட்கொண்டருள்வான். சிறியோர் செய்த பிழையெல்லாம் பொறுக்கும் பெரியோன் இறைவன்.

உயிர்க்கு வாழ்க்கைக்குரிய முதல் எது? முதல் – தொடக்கம் என்றும் பொருள் கொள்ளலாம். மேலும், உயிர் வாழ்க்கைக்குரிய ஆக்கங்கள் அனைத்தையும் வழங்கிய முதல் என்றும் பொருள் கொள்ளலாம். ஆம்! உயிர் என்றுமுளது; உயிர் இயல்பிலேயே ஆணவத்துடன் அத்துவிதமாக முடங்கிக் கிடக்கிறது; அறிவியக்கத்திற்குரிய வாயில்கள் இருந்தும் ஆணவத்தின் கூட்டால் செயலடங்கி முடங்கி மூலையில் கிடக்கிறது. அப்போது இறைவனின் திருவருள் நோக்கம் உயிரின்பால் வீழ்கிறது. அதுவே வாழ்க்கையின் முதல் தொடக்கம்! உயிர்க்கு மனம், புத்தி, சித்தம், அகங்காரம் ஆகிய அறிவுக் கருவிகள் அடங்கிய நுண்ணுடல் கிடைக்கிறது. நுண்ணுடல் கிடைத்தவுடன் உயிர்க்கு வாழ்க்கை தொடங்குகிறது; தொடர்கிறது. இந்தத் தொடக்கத்திற்குப் பின் உயிர் செய் கருவிகளடங்கிய பரு உடலைப் பெற்றோர்வழி பெற்று மண்ணில் பிறப்பினைப் பெறுகிறது. இந்தப் பிறப்பில்தான் உயிர் பலமுறை சுற்றி வருகிறது. செய்ற்பாட்டுக்குரிய உடல் மாறும். அறிகருவிகள் அடங்கிய நுண்ணுடம்பு கடைசி வரையில்–முத்தி நிலை வரையில் தொடரும். இங்ஙனம் உயிர்க்கு வாழ்நிலை முதலாகவும், மனத் துணையாகவும் இருந்து வாழ்க்கையை இயக்கியருள்கிறது திருவருள்!

இந்த உயிர் வாழ்க்கை, வினைச்செயல், பயன் துய்த்தல், சாதல், பிற என்று தொடர்ந்து வருகிறது. கறங்குபோல் சுற்றிச் சுற்றி வருகிறது. இத்தனைத் துய்த்துவரும் பொழுதுதான் வாழ்க்கை துன்பமடைகிறது. வாழ்க்கையை இன்பமாக்கினாலும் இன்பத்தின் நிழலாகத் துன்பமே தொடர்கிறது! உயிர் உற்று அனுபவிக்கும் இன்பம், துன்பம் இரண்டுமே வினைக்கு முதல். துன்பத்திற்குக் காரணம்; பிறவிக்கு வித்து. மனம் எளிதில் நிறைவு பெறாது. அவா – ஆசை, கடல் அலைபோல் ஒன்றன்பின்

ஒன்றாகத் தொடர்ந்து வரும் இயல்பினது. ஒரோவழி ஆவல் நிறைவெய்தி மனம் நிறைவு கொண்டாலும் இந்த மன நிறைவு நிலையானது அல்ல. இந்த மன நிறைவும் குறைந்த காலத்திற்கே இருக்கும்; மயக்கம் பொருந்தியதாகவும் இருக்கும். மனவெழுச்சி விரிவடையும் தன்மையுடையது, ஆசை வெட்கமறியாது. மனம் தனது ஆசையை நிறைவேற்ற மட்டும் உரத்த கூச்சலிடும். மனம், தன் வயப்பட்டுக் கிடக்கும். மனிதர்களை ஆட்டிப்படைக்கும்; அடிமைப்படுத்தும்; சுதந்திரத்தைப் பறிக்கும். இதனால், உயிர் ஓயாது வினை இயற்றியும் இன்ப துன்பச் சுழற்சியில் சிக்கியும் அனுபவித்தும் அனுபவியாமலும், இந்த உலகில் ஏற்படும் அநாகரிகத் தன்மையுடையோர்களால் தாக்குண்டும் பாதிப்புக்குள்ளாகும். உயிர் செத்தும் பிறந்தும் சுற்றிச் சுற்றி வந்ததால் உடலுறு உளைச்சல், மன உளைச்சல்களுக்கு இரையாகி எய்த்துப் போகிறது; களைத்துப் போகிறது; எய்ப்பிலும் களைப்பிலும் வைப்புப் பொருள் போல் இறைவன் துணை செய்கிறான்; "அஞ்சல்" என்று அருள் செய்கிறான். மந்திரமும் மருந்தும் ஆகி நின்றருள் செய்கிறான். ஆதலால், துன்பத்தின் முடிவில் எய்ப்பினில் வைப்பாக விளங்கும் இறைவனின் திருவடிகளைப் பற்றுதல் வேண்டும். இத்தருணத்தில் பற்றவேண்டியது அவன் திருவடிகளையே! இந்த நிலையிலேயே மாணிக்கவாசகர் பிறந்து வளர்ந்து, கற்று முதலமைச்சராகி, அரசுப் பணிகள் செய்து எய்த்துக் களைத்த நிலையிலேயே திருப்பெருந்துறை இறைவனைச் சரண் அடைகின்றார். "எய்ப்பினில் வைப்பு" என்று எண்ணி அடைக்கலம் புகுகின்றார். திருப்பெருந்துறைச் சிவனும் ஆட்கொண்டருள்கின்றான். உயிர்களை இறைவன் ஆட்கொண்டருளியபிறகு உயிர்கள் இறைவனின் அடைக்கல பொருளாகின்றன. பாதுகாப்பது இறைவனின் பொறுப்பு. இங்ஙனம் அடைக்கலப் பொருள்களாகிய உயிர்களைக் காக்கவே திருவிளையாடல்கள்! மாணிக்கவாசகர் ஆட்கொள்ளப்பட்ட பிறகு, மாணிக்கவாசகரின் பணிகள் இறைவனின் பணிகளாயின. மாணிக்கவாசகருக்காக இறைவன் குதிரைச் சேவகனாகிறான்! கொற்றாளாகிறான். இது நியதி.

பிறவி, நோய் நீக்கத்திற்குரிய மருந்தே யாம்! ஆயினும், தெளிவும் தெளிவினுட் சிவமும் தோன்றும் வரை பிறவி ஒரு வலைதான்! துன்பந்தான்! இந்தப் பிறவி வலையை அறுத்தெறிய முயலுவதே வாழ்க்கையின் நோக்கம்; பயன்! மாணிக்கவாசகர் பழுத்த

மனத்தராகிறார். புளியம்பழம் போலத்தான் மாணிக்கவாசகர் தம் வாழ்வியல் அமைந்திருந்தது. ஆதலால், வாழ்க்கை உவர்ப்பாகிறது. இறைவன் திருவடிகளையே பேசுதல் தவமாகிறது; வாழ்வாகிறது.

பிறந்து வினை பல செய்து நுகருமாறு நுகர்ந்து எய்த்துக் களைத்துப்போய் எய்ப்பினில் வைப்பாக என்றும் தனித்துணையாக விளங்கக்கூடிய இறைவன் திருவடிகளைப் பற்றுதலே வாழ்க்கை; வாழ்க்கையின் பயன்!

தனித்துணை நீ நிற்க யான்தருக்
கித்தலை யால் நடந்த
வினைத்துணை யேனை விடுதிகண்
டாய் வினை யேனுடைய
மனத்துணை யே! என்தன் வாழ்முத
லேஎனக் கெய்ப்பில் வைப்பே!
தினைத்துணை யேனும் பொறேன்
துயராக்கையின் திண்வ லையே!

(நீத்தல் விண்ணப்பம் - 39)

தமிழக அரசு திருமுறைப்பயிற்சி வகுப்பு (2015-16)
தொடக்கம் - அறிவிப்பு

தமிழக அரசு ஆணையின்படி மதுரை, அருள்தரு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயில் ஓதுவார் பயிற்சிப்பள்ளி மூன்றாண்டுக்கான சான்றிதழ்ப் படிப்பு - நடப்பு கல்வி ஆண்டிற்கான (2015 - 16) மாணவர்கள் சேர்க்கை நடைபெறவிருக்கிறது. இப்பள்ளியில் சேர்ந்து பயில விரும்புவோர்

இணை ஆணையர் / செயல் அலுவலர்
அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயில்
மதுரை - 625 001

என்ற முகவரிக்கு எழுதியோ, நேரிலோ தொடர்பு கொள்ளும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

- ஆசிரியர்

(சென்ற இதழ்த் தொடர்ச்சி)

தவத்திரு குன்றக்குடி அடிகளார்

திரு. க. சிவாஜி, அவர்கள்,
(ஓய்வு பெற்ற கூட்டுறவுத்துறை கூடுதல் பதிவாளர்) எழுதியுள்ள
"கூட்டுறவு இயக்க முன்னோடிகள் வாழ்வும் தொண்டும்"
என்ற நூலிலிருந்து)

மக்களுடைய அடிப்படையான பிரச்சனைகளான உணவு உற்பத்தி மற்றும் வேலைவாய்ப்பு ஆகியவைகளில் முன்னேற்றம் எட்டினால் இதர பிரச்சனைகளை எளிதில் தீர்த்துக்கொள்ள முடியும் என்ற உண்மையை அடிகளார் புரிந்து கொண்டிருந்தார். இந்தக் கண்ணோட்டத்தில் மக்கள் பிரச்சனைகளை அணுகினார். இதன் விளைவாகத் தோன்றியது தான் குன்றக்குடி திட்டம்.

உணவு உற்பத்தியிலும் வேலை வாய்ப்பிலும் குன்றக்குடியை தன்னிறைவு கொண்டதாக மாற்றிடுவதை நோக்கமாகக் கொண்டு 1977ல் காந்தி பிறந்த நாளன்று குன்றக்குடி கிராமத் திட்டக்குழுவை அறிமுகப்படுத்தினார். அரசு வளர்ச்சித் திட்டங்களை உள்ளூர்த் தேவைகளுக்கு ஏற்ப மாற்றியமைத்து முழுமையாகப் பயன்படுத்துவது இதன் அடிப்படையாயிற்று. இக்குழுவில் அடிகளாரும் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகளும், காரைக்குடியில் செயல்பட்டு வரும் சிக்ரி நிலையத்தின் (CECRI - Central Electro - Chemical Research Institute) விஞ்ஞானிகளும் இடம் பெற்றிருந்தனர். கூட்டுறவுச் சங்கங்களின் தலைவர்கள் செயலாளர்கள் மற்றும் அரசுத்துறை அலுவலர்கள் ஆகியோர் திட்டச் செயலாளர்கள் மற்றும் அரசுத்துறை அலுவலர்கள் ஆகியோர் திட்டச் செயலாக்கத்தில் ஈடுபடுத்தப்பட்டனர். வழக்கமாக அரசாங்கத்தின் திட்டங்கள் அதன் அலுவலர்கள் மூலமாக செயல்படுத்தப்படும். ஆனால் அடிகளார் திட்டங்களை கிராம அளவில் தீட்டி அரசு அதனை ஆதரிக்கும்படியாகச் செய்தார். குன்றக்குடி திட்டக்குழு செல்வ மேம்பாட்டுக்காக மட்டும் திட்டமிடவில்லை. ஊர் மக்கள் அனைவரையும் சமூக வளர்ச்சியில் முழுமையாகப் பயன்படுத்துவதுங்கூட அதன் நோக்கமே. இந்த இரண்டு நோக்கங்களும் அற்புதமான முறையில் இணைக்கப்பட்டன. வீட்டுக்கு ஒருவர் வேலை வாய்ப்புப் பெறவேண்டும் என்ற திட்டக்குழுவின் இலட்சியம் நிறைவேறியது. பெண்கள் ஆதிதிராவிடர்கள் ஆகியோர் வேலைவாய்ப்புப் பெறச் சிறப்புக்

கவனம் செலுத்தப்பட்டது. குன்றக்குடி திட்டக்குழுவில் ஏழுபேர் இருந்தனர். பொதுக்குழுவில் தாழ்த்தப்பட்டோர்களும் பெண்களும் அநேகம் பேர் உறுப்பினர்களாக இருந்து சிறப்பான பங்களிப்பைச் செய்தனர்.

குன்றக்குடித் திட்டத்தின் சிறப்பம்சம் சமூக திட்டப்பணியில் மக்களைப் பங்கேற்கச் செய்வதுதான். அப்பொழுதுதான் பொது நோக்கம் முழுமையாக வெற்றியடைய முடியும். செயல்பாடுகளில் ஒளிவு மறைவற்ற தன்மை நிலவுவதால் ஒருவர் மீது ஒருவரின் சந்தேகம் குறைந்து பிணக்குகள் தோன்றுவது தடுக்கப்படுகின்றன. கூட்டுறவு இயக்கக் கோட்பாடுகள் அடிகளாரின் குன்றக்குடித் திட்டத்திற்கு அடிப்படையாக அமைந்திருந்தன. இரண்டுமே சமூகப் பொருளாதார வளர்ச்சியில் மக்களை நேரடியாகப் பங்கேற்கச் செய்வதை நோக்கமாகக் கொண்டுள்ளன. இதனால் தவறுகள் குறைகின்றன. தனிமனித வளர்ச்சியும் சமூக வளர்ச்சியும் ஒன்றுக்கொன்று முரண்படாமல் செயல்படுகின்றன. தனிமனித எண்ணங்கள் சமூகம் சார்ந்தவைகளாக வளர்க்கப்படுகின்றன. கூட்டுறவு அமைப்பின் உயிர்நாடி அதன் உறுப்பினர்கள்தான் என்பதை அடிகளார் உணர்ந்திருந்தார். கூட்டுறவுக் கொள்கைகளின் வெற்றி, கூட்டுறவுச் சங்க உறுப்பினர்களின் சிந்தனை மேம்பாட்டில் அடங்கியிருப்பதாக அடிகளார் கருதினார். "கூட்டுறவு" அமைப்பை வலிமையுறச் செய்வதற்கு உறுப்பினர்களின் சிந்தனை சக்தியைப் பெருக்க வேண்டும். எந்த ஒரு உறுப்பினரும் என்ன நினைக்கிறார் என்பதைக் கேட்டு அவருக்குத் தன் எண்ணத்தை வெளிப்படுத்த வாய்ப்பளித்து சிந்தனையை வளர்க்க உதவ வேண்டும். ஒவ்வாத கருத்துக்களைச் சொன்னாலும் நல்ல முறையில் அவரது சிந்தனையைத் திருத்தி மனதைப் பக்குவப்படுத்த வேண்டும். அத்தகைய மனப்பக்குவத்தை வளர்த்தால்தான் தகுதியானவர்களை நிருவாகத்திற்கு தேர்ந்தெடுக்கக்கூடிய பயிற்சியை உறுப்பினர்களுக்கு எளிதில் கிடைக்கக் கூடிய வாய்ப்பை ஏற்படுத்த முடியும்" என வலியுறுத்தினார். (தவத்திரு குன்றக்குடி அடிகளார், கூட்டுறவு, டிசம்பர் 1974, பக்கம்-13).

கூட்டுறவுச் சங்கங்களில் கடன் பெறுவதும் பின்னர் அதனை காலத்திற்குள் திருப்பிச் செலுத்தாமல் சங்கங்களின் நலிவுக்குக் காரணமாக இருப்பதும் சுயநல நோக்கில் கடன்களைத் தள்ளுபடி செய்யக் கோரிக்கை வைப்பதும் ஒரு சிலரின் சிந்தனைப் போக்காக மாறியுள்ளது. கூட்டுறவுச் சங்கத்தில் வாங்கிய கடனைத் திருப்பிச் செலுத்துவதற்கு வசதியிருந்தும், கட்டாமல் இருக்கும் வசதி படைத்தவர்கள்தான் கடன்

தள்ளுபடியால் அதிகம் பயனடைகிறார்களே தவிர ஏழை விவசாயிகள் அல்ல. வழங்கிய கடனை உரிய தவணைக் காலத்தில் வசூலிக்க இயலாத நிலையில் அத்தகைய சங்கங்கள் சரிவைச் சந்திக்கின்றன. இதனால் கூட்டுறவுச் சங்கங்களை மட்டும் சார்ந்து பயனடைந்து வரும் பல குடும்பங்கள் நலிவடைகின்றன. எளிய கடன்வசதிகளைப் பெற்றுப் பயனடைந்து வந்த ஏழை எளியவர்கள் மீண்டும் கந்து வட்டிக்காரர்களை நோக்கிச் செல்ல இது பாதை அமைக்கிறது. வாங்கிய கடனைக் கட்டக்கூடாது என்ற சிந்தனை குன்றக்குடி விவசாயிகள் சிலருக்கும் வந்துவிட்டது. இதற்குத் தீர்வு என்ன என்ற வினா குன்றக்குடி திட்டக்குழுவில் எழுப்பப்பட்டது. விவசாயிகள் இதுபோன்ற இயக்கத்தில் சேரக்கூடாது எனவும் வாங்கிய கடனை முறையாகச் செலுத்திவிட வேண்டும் எனவும் திட்டக்குழு துணிச்சலான முடிவை எடுத்தது. திட்டக்குழு எடுத்த முடிவில் உள்ள உண்மையைப் புரிந்துகொண்ட விவசாயிகள் கூட்டுறவுச் சங்கங்களில் தாங்கள் பெற்றிருந்த கடன் தவணைகளை திரும்பச் செலுத்தினர். குன்றக்குடி திட்டத்தின் அற்புதமான சாதனையாக இந்நிகழ்வு கருதப்பட்டது. (பொன்னீலன்.2003, பக்கம்-183)

குன்றக்குடித் திட்டப்பணிகள் செயலாக்கத்தில் அடிகளாருக்கு மனநிறைவு ஏற்பட்டது. குன்றக்குடியைப் போல் நூற்றுக்கணக்கான கிராமங்களைத் தன்னிறைவுடைய கிராமங்களாக நாடு முழுவதும் காண வேண்டும். நாட்டை நலிவுறச் செய்யும் வறுமையை எதிர்த்துப் போராடுவதே இனி நமது வாழ்நாட்பணி. சாதி மதச் சண்டைகளால் சமூக உறவுகள் பாதிக்கப்பட்டு கிராமங்கள் ஒளி இழந்து போகாமல் பாதுகாத்து வளர்ப்பதே நம் பணி என சூளுரைத்தார் (தவத்திரு பொன்னம்பல அடிகளார், 2002 பக்கம்-35)

கூட்டுறவுத் தத்துவங்கள் அடிகளாரின் சிந்தனை அளவில் நின்றுவிடவில்லை. அவற்றுக்குச் செயல்வடிவம் கொடுக்கத் தீர்மானித்தார். மக்களுக்கு விவசாயம் வாழ்வாதாரமாக விளங்கி வரும் சூழ்நிலையில் அதில் மாறுதலைக் கொண்டு வருவது அவசியமானதாகத் தோன்றியது. இதற்காக அவ்வூர் விவசாயிகளின் சிந்தனையைத் தூண்டினார். இவர்களது பிரச்சனை விவசாயம் செய்யத் தேவையான மூலதனத்தைத் திரட்டுவது தான் என அறிவித்தார்.

குன்றக்குடியில் உள்ள ஏழை விவசாயிகள் எளிதில் விவசாயக் கடன்கள் பெற ஏதுவாக, கூட்டுறவுத்துறை அலுவலர்கள் ஒத்துழைப்புடன் 20.06.1960இல் பதிவு செய்து 29.06.1960இல் குன்றக்குடி கூட்டுறவுக்

கடன் யூனியனை ஆரம்பித்தார். சங்கத்தின் முதல் உறுப்பினராக அடிகளார் சேர்ந்தார். இச்சங்கத்தின் முதல் தலைவராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டு செயல்பட்டார்.

துவங்கப்பட்ட சில மாதங்களிலே இது அவ்வூர் விவசாயிகளுக்கு நீண்ட காலத்திற்குப் பயனளிக்கவல்லது என்று அடிகளார் உணர்ந்து கொண்டார். சங்கத்தின் எதிர்கால வளர்ச்சியைக் கருத்தில் கொண்டு மடத்துக்குச் சொந்தமான பத்து சென்ட் நிலத்தை கட்டடம் கட்டிக் கொள்வதற்காகத் தானமாக வழங்கினார். இந்தச் சங்கம் 1968இல் குன்றக்குடி கூட்டுறவு விவசாய நாணயச் சங்கம் என்று பெயர் மாற்றம் பெற்றுத் தற்பொழுது தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கம் என அழைக்கப்படுகிறது. கூட்டுறவு மூலம் விவசாயிகள் பயன்பெற வேண்டும் என்ற அடிகளாரின் இலட்சியம் நிறைவேறியுள்ளது. இன்றும் இலாபத்தில் செயல்பட்டு, இந்தச் சங்கம் ஏறத்தாழ நாலாயிரம் உறுப்பினர்களின் வாழ்க்கைக்குத் துணை நிற்கிறது. (குன்றக்குடி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்தின் குறிப்புகள்)

வேளாண் தொழிலில் கிடைக்கும் வருவாய் போதுமானதாக இல்லாத நிலையைச் சமாளிக்கவும் ஆண்டு முழுதும் நிரந்தர வருவாய் கிடைக்க உறுதி செய்துகொள்ளவும் கிராமங்களில் உள்ள விவசாயிகளும் விவசாயக் கூலிகளும் பாலுக்காக கால்நடைகள் வளர்ப்பது கிராமப்பொருளாதாரத்தில் தொன்றுதொட்டுக் காணப்படும் அடிப்படைக் கூறு. அப்படிப் பாலுக்காக பசு மாடு மற்றும் எருமை மாடு வளர்ப்போர்க்கு அவர்கள் உற்பத்தி செய்யும் பாலுக்கு நியாயவிலை கிடைப்பதில்லை. அவர்களது உழைப்பு சுரண்டப்படுவதை அடிகளார் அறிந்தார். ஒரு பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கத்தை 08.03.1962 இல் அடிகளார் ஆரம்பித்தார். சங்கத்தின் முதல் உறுப்பினராக அடிகளார் தன்னைப் பதிவு செய்து கொண்டார். அவரே அதன் முதல் தலைவராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டு நிருவாகத்தை நடத்தினார்.

சங்க நிருவாகம் செவ்வனே நடைபெற, அதற்குச் சொந்த அலுவலகம் கட்டடம் இருத்தல் அவசியம் என்று உணர்ந்த அடிகளார், மடத்திற்குச் சொந்தமான பதினைந்து சென்ட் நிலத்தைத் தானமாக வழங்கினார். அதில் கட்டடம் ஒன்றைக்கட்டி 24.01.1984இல் திறந்து வைத்தார். (குன்றக்குடி பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கக் குறிப்புகள்)

மாணவர்களிடையே இளம் வயதில் கூட்டுறவுத் தத்துவங்களை பரவச் செய்யும் நோக்குடனும் அவர்களுக்கு நியாயவிலையில் நோட்டுப்

புத்தகங்கள் உள்ளிட்ட பொருட்கள் கிடைக்கச் செய்யவும் திருவள்ளுவர் பெயரால் பள்ளியில் ஒரு மாணவர் கூட்டுறவுப் பண்டகசாலை 29.03.1965இல் ஆரம்பிக்கப்பட்டது.

அடிகளாருக்கு ஜவஹர்லால் நேரு மீது அளவற்ற ஈடுபாடு. நேரு அமரரான தினத்தில் துவங்கப்பட்ட காகிதப் பை தயாரிக்கும் தொழிற் கூடத்தைப் பின்னர் பாலிதீன் பைகள் தயாரித்து அரசு அலுவலகங்களுக்கும் அரசு சார் நிறுவனங்களுக்கும் விற்பனை சய்யும் கூட்டுறவுச் சங்கமாக 18.04.1996இல் மாற்றினார். இது பெண்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் நோக்கத்துடன் ஆரம்பிக்கப்பட்டது. இதற்கு "நேருஜீ பாலிதின் பணியாளர் தொழிற் கூட்டுறவு சங்கம்" என்று பெயரிட்டு மகிழ்ந்தார். இதன் முதல் உறுப்பினர் அடிகளார். அத்துடன் இச்சங்கத்தின் துணைத் தலைவராகவும் இருந்து சங்க வளர்ச்சிக்கு ஆலோசனைகள் வழங்கினார். ஆரம்பக் கட்டத்தில் அட்டைகளையும் அட்டை பெட்டிகளையும் தயாரித்து வந்த இச்சங்கம் அதில் கிடைத்த அனுபவத்தைக்கொண்டும் தொழில் நுட்ப அறிவைக் கொண்டும் பின்னர் பாலிதின் பைகளை தயாரிக்கத் தொடங்கியது.

கிராமங்களில் ஆடு வளர்ப்பை முழுநேரத் தொழிலாக ஒரு சிலரும் துணைத் தொழிலாக சிலரும் மேற்கொண்டு வாழ்ந்து வருகின்றனர். கிராமங்களில் இது ஒரு சிக்கனமான அதே நேரத்தில் அதிக முதலீடு தேவைப்படாத தொழில் ஆகும். காடுகள், ஆற்றங்கரை, குளத்தங்கரை, தரிசு நிலங்கள் ஆகியன ஆடுகளுக்கு மேய்ச்சல் நிலங்களாகும். குன்றக்குடியில் இத்தகு இயற்கை சூழ்நிலை நிலவியதால் இயல்பாகவே கிராம மக்கள் ஆடு வளர்ப்பை ஒரு தொழிலாகச் செய்துவந்தனர். ஆனால் ஆடுகளை வாங்குவதற்குத் தேவைப்படும் பணத்திற்கு தனியாரிடம் அதிக வட்டிக்குக் கையேந்தும் நிலை இருந்தது. அவர்களுக்கு குறைந்த வட்டியில் கடன் வழங்கப்படுவதை உறுதி செய்ய அடிகளார் ஆடு வளர்ப்பு கூட்டுறவுச் சங்கத்தை 24.11.1974இல் ஆரம்பித்தார். ஏழை எளியவர்கள் இச்சங்கத்தில் உறுப்பினர்களாகச் சேர்ந்து பயன் பெற்ற சங்கம் சொந்தமாக ஐந்து ஏக்கர் பரப்பில் புல் வளர்த்து சங்க உறுப்பினர்களுக்குக் குறைந்த விலையில் புல் விற்பனை செய்வது என்பது ஒரு குறிப்பிடத்தக்க அம்சம். மாடுகளுக்கும் கன்றுகளுக்கும் முறையான மருத்துவ சிகிச்சைக்கும் ஏற்பாடு செய்யப்பட்டது. இச்சங்கத்தில் தன்னை முதல் உறுப்பினராகப் பதிவு செய்து கொண்டதுடன் அடிகளார் அதன் இயக்குநர்களில் ஒருவராகவும் இருந்து செயல்பட்டார்.

(தொடரும்)

உலகினில் நிலவுக நூறாண்டே

(தவத்திரு பொன்னம்பல அடிகளார் அவர்களின் 52ஆம் நாண்மங்கலம் 16.07.2015)

(பரம்)

அருணையா தீனக் குருமணி எங்கள்
அருள்திரு பொன்னம் பலஅடிகள்
திருவருள் கூட்ட ஐம்பத் திரண்டாம்
திருநாள் மங்கல விழாக் கண்டார்!
அருள்நெறித் தந்தை அடிச்சு வட்டினில்
அளப்பரும் தொணடுக ளாற்றிவரும்
பெருமையை நாள்தொறும் பேசிடும் மக்கள்
பெருகி வருவது கண்கூடாம்!

ஆயிர மாயிரம் மேடைப் பொழிவுகள்;
அறிஞ ரவைகள், அயல்நாடு
போயிவர் செய்த பொழிவுகள் பற்பல:
புகழ்சால் பல்கலைக் கழகங்கள்
நேயமாய் அழைக்கும் பட்ட மளிப்பு
நிகழ்ச்சிப் பேருரை பலவாகும்
ஓயுத லில்லா உன்னதப் பொழிவுகள்
உரையினுக் கடங்கச் சிறப்பினவே!

உலகத் திருக்குறள் பேரவைத் தொண்டொடு
ஒளிதரு கல்விப் பணி, மக்கள்
நலப்பணி யான திட்டப் பணிகளும்
நாள்தொறும் நாடி ஆற்றிவரும்

தலைமைப் பண்பின் உறைவிட மாகிய
சந்நிதா னத்தின் தாள்மலர்கள்
நிலவுக சென்னியில் என்றுகை கூப்புடுவோம்!
நிலத்தினில் வீழ்ந்து வணங்கிடுவோம்!

கருணையின் வடிவம்; எளியவர் துன்பக்
கண்ணீர் துடைக்கும் திருக்கரமே!
பெருகிடும் பணிச்சுமை தாங்கிடும் திண்மை
பெற்றவர் பொன்னம் பலஅடிகள்!
அருமையில் எளிய அருள்வடி வாக
ஆண்டவன் அளித்த வரமாவார்!
ஒருமன மாக வாழ்த்தி வணங்குவோம்
உலகினில் நிலவுக நூறாண்டே!

குன்றக்குடி வீதியிலே முருகன்

எடுப்பு

குன்றக்குடி வீதியிலே - வேலேந்தும்
குமரன் நடந்து வந்தான் - அவன்
தோளின்மேல் வந்தது எல்லாம் - அன்பர்
தோகை மயில்களான தாலே!

- குன்றக்குடி ....

தொடுப்பு

வலப்புறம் வள்ளியும் வான்வனிதையும்உடன்
வலந்தரும் வடிவேலும் வாரணக் கொடியோடு

- குன்றக்குடி ....

முடிப்பு

வல்லபை கணபதி வழிவிட இடும்பனும்
வழிபட குழந்தைவடி வேலனின் சந்நிதியில்
தேரோடும் திருவீதி திருமட இடம்கேட்டு
சீரோடும் சிறப்பைஎல்லாம் சீராகப் பெறுதற்கே!

- குன்றக்குடி ....

- தமிழாகரர். தெ. முருகசாமி



ஜோதியான குன்றக்குடியார்

(91–ஆம் அவதார திருநாள் 11.07.2015)

(டாக்டர். இரத்தின ஜனார்த்தனன்)

காவியுடைக் குள்ளிருந்து கடவுள் சேவை
கருணையுறு முகத்துடனே மனிதர் சேவை
ஆவியுறு விளக்கத்தால் ஆன்ம சேவை
ஆழமிகு தமிழ்ப்பேச்சால் தாயின் சேவை
மேவிவரும் புதுப்புனலை மேலை நாட்டின்
மேன்மைதரும் அறிவியலைத் தமிழில் ஆக்க
மேடைதொறும் முழங்கியநீ அமைதி கொண்டாய்
மேல்மகனைப் பிரிந்த என்தாய் அமைதியற்றாள்

கம்பனுக்கு நீஉதிர்த்த விளக்க மெல்லாம்
கடுகளவும் தமிழுலகம் மறக்கா தய்யா!
உம்தலைமைத் தமிழ்ப்பேச வாய்க்கப் பெற்று
உலகத்தில் பெரும்பேறாய் நினைத்தேன் அய்யா
அம்பரத்தில் சிவப்பரனை சாட்சி வைத்து
ஆற்றியநல் சேவையினைப் பரமன் கண்டான்
உம்பரத்தில் உனைஏற்றான்! வானை ஏற்றாய்!
உனைப்பிரிந்த தமிழ்த்தாயோ நாதி யற்றாள்!

படமாடும் கோவிலினில் சிந்தை வைத்தாய்
பரமனுடைப் பிள்ளைகளைப் பாதுகாத்தாய்
நடமாடும் கோவிலுக்கே நாளும் வாழ்ந்தாய்
நலம்பெறவே அவர்களுக்கு நாலும் செய்தாய்
புடம்போட்டுக் கல்வியினைத் தமிழில் மாற்றப்
புதியபல வழிசெய்து கடமை ஏற்றாய்!
மடல்விரிந்த உன்பணியும் முடியு முன்னே
மரணமில்லாப் பெருவாழ்வில் ஜோதி யானாய்!

கோவலன் பிரிவு

(தமிழாகரர். தெ. முருகசாமி)

கோவலன் கண்ணகியைப் பிரிந்தான், இதனால் கண்ணகி கோவலனைப் பிரிந்து வாழ்ந்தாள், பிரிவு என்பது இருவர்க்குமே நடந்ததாயினும் அகஇலக்கணமரபுப்படித் தலைவன் தலைவியைப் பிரிதலையே பிரிவாகக் கருதப்படுவதால் கோவலன் பிரிவுபற்றிச் சிந்திப்பதே இக்கட்டுரையின் கருதுகோளாகும்.

இவ்வறமாம் கற்பியல் வாழ்வில் ஆறு வகையான பிரிவுகளைத் தலைமகனுக்குக் கூறுகிறது தொல்காப்பியம். அவை 1. ஓதல், 2. பகை (போர்) 3. தூது 4. காவல், 5. பொருள் 6. பரத்தை - என்ற காரணங்களுக்காகத் தலைவன் பிரியும் நிலையில் கோவலனது பிரிவு, கூறப்பட்ட ஆறனுள் எந்தப் பிரிவுடன் பொருந்தும் என்பது ஈண்டுள்ள வினாவாகச் சிந்திக்கத் தூண்டுகிறது.

கூறப்படும் பிரிவுகளின் பொதுத்தன்மையாக ஒன்றை உணரலாம். அதாவது திட்டமிட்டவாறே அப்பிரிவுகள் அமைவதுதான் அவற்றின் பொதுமை. இந்த அடிப்படையில் கோவலனது பிரிவு மேற்கூறிய ஆறனுள் அங்காததோடு திட்டமிடப்படாமலேயே பிரிவு நடந்துள்ளதென்பதும் நுட்பமாக நோக்க வேண்டியுள்ளது.

கண்ணகியை விட்டு மாதவியிடம் சென்றது எதிர்பாராத நிகழ்ச்சியாகும். ஆனாலும் சித்திராபதியின் மகள் மாதவி என்பதால் அவளது இல்லம் சித்திராபதியின் பரத்தமை முகவரியோடே நகரமாந்தர் அறிந்திருப்பர் என்ற களங்கம் காப்பியம் படிப்போர்க்குப் புரிந்த ஒன்றேயாம். ஆனாலும் மாதவியைப் பொறுத்தமட்டில் அவள் ஒருவனுக்கு ஒருத்தியாகவே வாழ்ந்த உண்மையை நகரமாந்தர்க்குப் பின்னரே தெரிய வந்ததாகலின் கோவலன் கூனிவிற்ற மாலையை வாங்கிக் கொண்டு மாதவியிடம் பயணித்தபோதே பரத்தமை விலாசமுள்ள இடத்திற்கே சென்றான் என்ற உண்மையை யாரும் உணராமல் இரார். மாதவி சேற்றில் பிறந்த செந்தாமரை என்பதைத் தொடக்கத்தில் அறிய மக்கட்கு வாய்ப்பில்லை. காலப்போக்கில் தான் அவள் ஒருவனுக்கு ஒருத்தி என்ற பெருமையைப் பெற்றாள்.

இந்தப் பின்னணியில் கோவலன் பிரிவு பரத்தையர் பிரிவு என உறுதியாகக் கூறமுடியாதென்றாலும் அப்பிரிவுக்கான பெயர்தான் யாது என வினவ வேண்டியுள்ளது! ஏழாவது பிரிவாகக் கொள்ளலாமாயினும் அதற்குரிய பெயர் யாது? என இளங்கோ உள்ளிட்ட எவரும் புதுப்பெயர் கூறினாரில்லை. இச்சூழலில் இப்பிரிவை எந்தவிதமாக உணர்வது? என ஆராயின் ஒரோர்வழி பரத்தமைப் பிரிவுக்குள் அடக்கவே வாய்ப்புள்ளது எனலாம். முழுமையான பரத்தமைப் பிரிவு எனக் கூறாமல் ஒரோவழி கூறலாம் என்க! இக்கருத்தைத் தொல்காப்பியர்வழி உறுதிப்படுத்தலாம்.

புணர்தல் பிரிதல் இருத்தல் இரங்கல்
ஊடல் இவற்றின் நிமித்தம் என்றிவை
நேருங் காலைத் திணைக்குரிப் பொருளே.

தொல்காப்பியப் பொருளதிகார அகத்திணையியலின் 14ஆம் நூற்பாவான இது, ஐந்து வகையான உரிப்பொருளை அவற்றின் நிமித்தங்களோடு கூறுகின்றது. கூறப்பட்ட ஒழுங்கில் புணர்தல், பிரிதல், இரங்கல், ஊடல் என்பதாக மட்டுமே கூறாமல் அவற்றின் நிமித்தம் என்ற ஒன்றையும் சேர்த்துக் கூறியுள்ளது சிந்திக்கத் தக்கதாக உள்ளது.

நிமித்தம் என்றால் காரணம், எந்தச் செயலுக்கும் காரணமே முன்னதாகும். அவ்வாறே கூறப்பட்ட புணர்தல், பிரிதல், இருத்தல், இரங்கல், ஊடல் எனப்பட்ட ஐந்தும் செயல்களாக இருக்க அவை நிகழ்தற்குரிய முன் குறிப்பாக அமைவதையே தொல்காப்பியம் நிமித்தம் என்றது. அதன்படி ஈண்டு கோவலனோடு உய்த்துணர்தற்குரிய பரத்தமைப் பிரிவின் முகிழ்ப்பாகவே ஊடல் நிமித்தத்தை ஒருவாறு உணரலாம்.

ஊடல் என்பது பல்வேறு வகையாக அமையலாமாயினும் அப்பலவற்றுள் பரத்தமைத் தொடர்பாக அமையும் ஊடலே நாடகப்பாங்கில் விரிவாக இலக்கியங்கள் கூறுவதால் பிறவற்றாலான ஊடலினும் பரத்தமையாலாகும் உடலால் தலைவன் தலைவியர்க்குள் மனவேறுபாடமைவது பெரிதாகப் பேசப்படுவதாயிற்று.

அந்த வகையில் ஈண்டுச் சிலப்பதிகாரத்தைப் பொறுத்தமட்டில் பரத்தமைத் தொடர்பான ஊடல் அமைய வாய்ப்பில்லையாயினும் ஊடல் நிமித்தமான குறிப்பால் கோவலனது பிரிவைப் பரத்தமைப் பிரிவுக்குரியதாக ஒரோவழி உய்த்துணரலாம்.

நகர நம்பியர் திரிகின்ற தெருவில் மாதவியின் வேலையாள் கூனிவிற்ற மாலையை வாங்கிக்கொண்டு மாதவியைக் கண்டு மயங்கும் வரை கோவலன், கண்ணகியைப் பிரியவில்லை, மாதவியைக் கண்டு விடுதலறியா விருப்பினன் ஆனதுமே அவனது பிரிவு தொடங்கிவிட்டது.

கதையமைப்பின்படி மாதவி பரத்தமை ஒழுக்கத்தினள் அல்லளாயினும் தாமரை பிறந்தது சேற்றில்தான் என்ற மாறாத மாசுபோலச் சித்திராபதியின் மகள் என்ற தாயைச் சுட்டியே நகரமாந்தர் மாதவியை உணர்வர் என்பதால் அந்தக் களங்கம் அமைவதற்குரியதாகவே கோவலனது பிரிவு அமைந்துவிடுகிறது. அதாவது மாதவி கோவலனோடு வாழ்ந்து பிரிந்ததும் தான் அவன் ஒருவனுக்கு ஒருத்தியாக வாழ்ந்தாள் என்பதை உலகம் அறிந்தாலும் அவ்வாழ்விற்கு முன் அவள் பரத்தையான சித்திராபதி மகள் என்ற தாய் விலாசத்தோடே அவளது இல்லம், பரத்தமை இல்லம் என்ற கறையோடேயே இருந்ததென்பது மறக்கற்பாலதன்று. இதனை "உய்த்துக் கொண்டுணர்தல்" எனும் உத்தியால் உணரலாம். இப்படியாகக் கோவலன் மாதவியிடம் சென்றது பற்றிக் கண்ணகிக்குத் தெரியாவிட்டாலும் ஊரார் அறியுமாறு அமைந்தவிட்ட காரணத்தால் (நிமித்தத்தால்) கோவலனது பிரிவு கண்ணகிக்கு வருத்தத்தைக் கொடுப்பதற்கான சூழலை உருவாக்கிவிட்டதென்பது காப்பிய அளவில் நின்று நிலைத்துவிட்டதால் பரத்தமைப் பிரிவாக அனுமானிக்கத் தக்க ஊடல் நித்தம் ஆகிவிட்டது எனலாம்.

மேலும் இதனையே வேறொரு வகையாகவும் உணரலாம். தன்னைவிட்டுப் பிரிந்தவன் வாராத நிலையில் தன் கணவன் மாதவியிடம் சென்றுவிட்டதை, எவ்வாறேனும் கேட்டறிந்திருப்பாளாதலின் அந்த உண்மையே கோவலனால் மறைமுகமாக உணர்த்தப்பட்ட ஊடல் நிமித்தமாகிவிட்டதால் அந்நிமித்தமே ஒரோவழிக் கோவலனின் பரத்தமைப் பிரிவைப்போல் நினைக்கக் காரணமாயிற்று எனலாம். முற்றிலுமாகவும் உண்மையாகவும் கோவலனது பிரிவு, பரத்தமைக்கென்று எனக் கூறத் துணியாநிலையிலேயே நிமித்தத்திற்கான நிலையை உணரச் செய்தார் எனலாம்.

நிமித்தமும் (காரணமும்) காரியம் நிகழ்த்துதற்குரியதாகலின் அதனையும் (நிமித்தத்தையும்) காரியமாகவே அதாவது ஊடலுக்குரிய பரத்தமைப்பிரிவாகவே கொள்ளலாமாயினும் காரணம் தோன்றியவழிக்

காரியம் நிகழாமலும் போகலாம் என்பதால் ஈண்டு நிமித்தம் மட்டுமே முதன்மைப்படுத்தப்பட்டது. அதாவது பரத்தமைப் பொருட்டால் கோவலனது பிரிவு அமையவில்லையாயினும் ஒரோ வழி அதனை நினைப்பிக்கும் அளவில் சூழல்கள் இருந்ததை இளங்கோ தெளிவுபடுத்துவதால் பரத்தமைப் பிரிவுக்கான நிமித்தமே ஈண்டு கருத்தில் கொள்ளப்பட்டது எனலாம்.

இதனை இன்னொருவகையாகவும் உறுதிப்படுத்தலாம். கானல்வரிப் பாடலில் கூறப்பட்ட இளங்கோவின் உவமையான உவவுற்ற திங்கள் முகத்தாள் என்ற மாதவிபற்றிய கருத்தும் ஈண்டுப் பொருத்தி உணருங்கால் மாதவி பரத்தை ஒழுக்கத்தினள் அல்லள் என்றாலும் பரத்தமைக் குலத்தினள் என்பதைக் கூறாமல் கூறிய பாங்கால் உணரத் தூண்டுவதால் முற்றிலுமாகவும் உண்மையாகவும் பரத்தமைப் பிரிவாகக் கூற வாய்ப்பில்லையாயினும் ஒரோவழி அதனை நினைப்பிக்குமாறாக உவமை கூறப்பட்டதால் பரத்தமைப் பிரிவின் நிமித்தமாகக் கருதலாம் என்க!

இவ்வாறாகக் கண்ணகி கோவலனைப் பிரிந்தாலும் கோவலனது பிரிவு பரத்தைப் பிரிவின் சாயலை நினைப்பிப்பதாகவே உள்ளது எனலாம். இங்ஙனம் ஒரோவழிக் கருதாவிடின் கோவலனது பிரிவை அகப்பொருள் பிரிவுகளுள் அடக்கமுடியாத பிழையாகிவிடும் என்க!

ஈண்டோர் ஐயம்! அதாவது சுட்டப்பட்ட பிரிவுகள் சுட்டி ஒருவர்ப் பெயர் கொள்ளப் பெறாத அகப்பொருள் மாந்தர்க்கே பொருந்தும் என்பதால் கோவலன், கண்ணகி எனச்சுட்டப்பட்ட நிலையில் அக இலக்கியத்தைப் பொருத்தி உணர்தல் ஏற்புடைத்தன்று என ஐயுறலாம். அங்ஙனம் பெயர் சுட்டினாலும் அவ்வகப்பொருள் பொருந்துற அமையும்போது அதனை "அகப்புறம்" என்பதாகக் கருதுவது மரபாம் என்பதால் கோவலனது பிரிவு – ஊடலுக்கான பரத்தமைப் பிரிவின் நிமித்தமாகவே உணரலாம் என்க!

"மக்கள் சிந்தனை"யில் வெளிவரும் கட்டுரைகள், கவிதைகள் முதலியவற்றில் அமைந்துள்ள கருத்துக்களுக்கு அவற்றை எழுதியவர்களே பொறுப்பாவர்.

– ஆசிரியர்

அகில இலங்கை சைவமகாசபை

கல்லூரி வீதி, கொக்குவில், யாழ்ப்பாணம்

தெய்விக அறம் வளர்க்கும் மனிதநேயத் துறவியின் அகவை 51 நிறைவின் வாழ்த்துக்கள்

சைவத்தமிழ் உலகு போற்றும் திருவண்ணாமலை குன்றக்குடி ஆதீனத்துனுடைய குருமகா சந்நிதானம் அதி வணக்கத்துக்குரிய பொன்னம்பல தேசிக சுவாமிகளை ஈழம்வாழ் சைவத்தமிழர்கள் சார்பாக அகில இல்ங்கை சைவமகாசபை வாழ்த்துவதில் பேருவகை அடைகிறது.

பெறுதற்குரிய மானிடப்பிறவியில் 50 ஆண்டுகளை தாண்டி தனது 51 அகவையை பூர்த்தி செய்யும் அருட் பெரும் துறவி தற்போதைய குன்றக்குடி ஆதீனகர்த்தராகிய தாங்கள் உங்களுடைய குருநாதர் போன்று சைவத்தமிழ் உலகிற்கு வழங்கி வரும் உன்னத சேவை போற்றுதற்குரியது.

"கோவிலை தழுவிய குடிகள், குடிமக்களை தழுவிய கோவில்" என்பதை தாரகமந்திரமாகக் கொண்டு ஆலயங்களை சமூக மையங்களாக திகழச்செய்து திருப்பணியுடன் அறப்பணியும் செய்வதோடு கிராமிய மாணவர்களின் அறிவியல் கண்களை திறப்பதற்கும் தாங்களும் தங்கள் ஆதீனமும் கடந்த 50 ஆண்டுகளாக ஆற்றும் உன்னத மனிதநேயப் பணியை முழுசைவ உலகும் தலைசாய்த்து பின்பற்றவேண்டும் என்பது எமது பேராவாகும்.

தங்கள் ஆதீனத்தைப் பின்பற்றி ஈழத்தின் யுத்தத்தின் வடுக்களை அடைந்த மண்ணிலே எமது பணிகளை முன்னெடுத்து வருகின்ற சைவமகா சபையினராகிய நாங்கள் என்றும் தங்கள் அருளாசியை வேண்டி நிற்பதோடு தங்களுக்கு எல்லாம் வல்ல "அன்பே சிவமாய்" அமர்ந்திருக்கின்ற அண்ணாமலை உறையும் எம் பிரான் நிறைந்த ஆயுளையும் நோய்நொடியற்ற பெருவாழ்க்கையையும் நல்க பிரார்த்தித்து தங்கள் பாதம் பணிந்து ஆசி வேண்டி வாழ்த்து நல்கி நிற்கின்றோம்.

அன்புடன்
ப. நந்தகுமார்
பொதுச்செயலாளர்

மணிமொழியனார் வாழ்க!

(எழுபதாம் அகவை விழா 1.4.2015)

(மரு. பரமகுரு)

திருக்குறள் நெறியைப் பரப்புதல் ஒன்றே
சிந்தையில் கொண்ட திருவாளர்;
கருத்தினை மொழியாய் வாய்மலர்ந் தால்இவர்
கலக லெனவிழும் குறள்மணிகள்!
ஒருத்தரும் இவரை ஒத்தவர் இலர்எனும்
உவகை பொங்கிடும் உளத்தினிலே!
சிறப்புடன் ஏழுபத் தகவை எய்தினார்
திருக்குறட் செம்மல் மணிமொழியன்!

மங்கல மாட்சியர் கமலா தேவி,இம்
மன்னருக் கேற்ற துணையானார்;
செங்கம லத்தாய் போன்றவர் இவருடன்
திருக்குறட் செம்மல் மணிமொழியன்
தங்க மனத்தினர் பொங்கிய மகிழ்வுடன்
தனிப்பெரும் இனிய விழாக்கண்டார்!
சங்கம் வளர்த்த பாண்டியன் எனவே
தரணியில் வாழிய, வாழியவே!

குன்றக் குடியின் அருணை யாதீனக்
குருமணி இருவர் திருமனத்தும்
நின்று திகழ்ந்திடும் பேறு பெற்றவர்;
நேரிய பண்பின் இமயமவர்;
என்றும் திருக்குறள் பணியினில் மூச்சும்
இதயமும் வைத்த பெருந்தகையார்;
பொன்றாப் புகழுடன் திருக்குறள் போல்,இப்
புண்ணியர் வாழிய, வாழியரோ!

சிறப்பாசிரியர் அவர்களுக்கு வந்த கடிதங்கள்....

போற்றுதலுக்குரிய தவத்திரு அடிகளார் அய்யா அவர்களுக்கு. வணக்கம்.

பெரியகுளம் விழாவிற்கு தாங்கள் வந்திருந்து ஆழ்ந்த உரையாற்றியதும் அடிமனத்திலிருந்து வாழ்த்தியதும் எங்க்ளுக்குப் பெருநிறைவு தந்தது.

வாழ்கிற தலைமுறையில் ஆழ்ந்த புலமையோடும் தமிழாற்றலோடும் தலைசிறந்த தமிழ்ச் சான்றோராய்த் திகழும் தாங்கள் எங்கள் விழாக்களை வாழ்த்தியருளுவது குறித்து மிகவும் பெருமைப்படுகிறோம்.

ஒரு மேடைக்குப் பொருத்தமான பொருளோடு ஆழமான முன்தயாரிப்பு முக்கியம் என்பதைத் தங்கள் உரை மெய்ப்பித்தது.

அன்று தாங்கள் ஆற்றிய அருந்தமிழ் உரை குறித்த மகிழ்ச்சியை எங்கள் பேரவை நண்பர்களும் – உறவுகளும் – மண்ணின் மைந்தர்களும் என்னிடம் சொல்லிச் சொல்லிப் பெருமைப்பட்டார்கள்.

என் இலக்கிய வாழ்க்கையில் தங்கள் ஆசி உரைகள் அனைத்தும் அற்புதமான அரிதான பதிவுகள்.

தங்களோடு எனக்குள்ள உறவையும் – நட்பையும் நினைக்கும் போதெல்லாம் பெருமிதப்படுகிறேன்.

தங்கள் உரையாலும் ஆசியாலும் விழாவிற்கு வெற்றியும் – வெளிச்சமும் கிட்டின.

எங்களுக்கு எப்போதும் தங்கள் வாழ்த்தும் வழிகாட்டுதலும் வேண்டும். தங்கள் தொண்டுகளுக்கு நாங்களும் துணையிருப்போம்.

அடிமனதின் ஆழத்திலிருந்து நன்றி சொல்கிறேன்.

அன்புள்ள

கவிஞர். **வைரமுத்து**

மருத்துவரை, பொறியாளரை, சட்ட வல்லுநரை, தொழில் முனைவோரை, துறை நிபுணர்களை உருவாக்கித் தரும் கல்வி, முதலில் மனிதர்களையும் உருவாக்கித் தரவேண்டும். மனிதத்தை உருவாக்குவதே உண்மையான கல்வியின் பயன்.

– பொன்னம்பல அடிகளார்

பாலகிருட்டிணர் பல்லாண்டு வாழ்க

முத்துவிழா நாள் : 10.7.2015

(தமிழாகரர் தெ. முருகசாமி)



சதாகா லத்தின் உழைப்பின் சின்னமாம்
சதாபி டேகச் சரித்திரப் புருடர்
விஞ்ஞானி பால கிருட்டிணர் தாமும்
மெய்ஞ்ஞானி அருள்நெறித் தந்தை போற்றிய
பிரம்ம ஞானப் பெரும்புக ழோடு
சரஸ்வதி அம்மாள் சத்திய வதியுடன்
மருத்துவர் ஸ்ரீதர் பிரபா கரச்சங்கர்
பொருத்த மான பிள்ளைகள் பெற்றே
பேரும் புகழும் பிறங்கிட வல்ல
பேறெல்லாம் பெற்றதால் குன்றக் குடியில்
தொடரும் கல்விக் குழுமத் தோடும்
படரும் பக்திப் பரவசத் தோடும்
காரைக் குடியின் பேரைப் போற்றும்
சீரை யுடைய சிக்ரி ஆய்வகப்
பொறுப்பெல்லாம் கொண்ட பொன்னம் பலஅடிகள்
பொற்புறு கருணை பொங்கிப் பொலிய
அன்று சுனாமியில் அடிக ளாருடன்
நின்றுதோள் கொடுத்தே ஆற்றிய தொண்டு
நாகை யன்றி நாடே யறியும்!
வாகை கொண்ட பால கிருட்டிணர்
சீருடன் வந்த மருமகள் மற்றும்
பேருடன் பேரன் பேத்திகள் மகிழ
இத்தரை போற்றும் பிள்ளையார் பட்டியில்
சித்தம் மகிழ்கொள் விழாகாண் பால
கிருட்டிண தம்பதி! வாழி! வாழி!
அருட்டிரு அடிகள் வாழ்த்துபல் லாண்டே!

மருள்நீக்கியாரும் மன்றத்துப் புன்னகையும்

(குருமையாதீனப் புலவர்,வித்துவான். தா. குருசாமி தேசிகர்)

திருப்புகலூர்த் தலமரம் புன்னைமரமாகும். ஆண்டுதோறும் அப்பர் ஐக்கிய விழாப்பணி செய்யும் வாய்ப்பில், இவ்வாண்டும் சென்று பணிசெய்து வந்தேன். அக்கோயில் வேளாக்குறிச்சி ஆதீன அருளாட்சிக்கு உட்பட்டது. அத்திருக்கோயிலின் தலமரம் புன்னை, ஏற்கனவே இருந்தது பட்டுப்போய்விட்டதால், புதிதாக மரம் நட்டு நன்றாக வளர்ந்து கிளைகள் விட்டு அரும்புகள் பூத்திருந்தன. அந்த மரமும் இந்தாண்டு கடும் வெயிலில் முற்றிலும் பட்டுப்போய்விட்டதால், மீண்டும் புதிதாக புன்னைக் கன்று வைத்திருந்த காட்சி கண்டேன்.

எனக்கு அப்பர் பாடல் நினைவுக்கு வந்தது.

மன்றத்துப் புன்னைபோல மரம்படு துயரம்எய்தி
ஒன்றினால் உணரமாட்டேன் உன்னை உள்வைக்க மாட்டேன்
கன்றிய காலன்வந்து கருக்குழி விழுப்பதற்கே
அன்றிநான் அலமந்திட்டேன் அதிகை வீரட்டனீரே - என்பது பாடல்.

புன்னைமரம் நெய்தல்நிலம் சார்ந்த - கடலும் கடல் சார்ந்த இடங்களில் காணப்படும். நெய்தல் நிலக்கருப்பொருளில் இதுவும் ஒன்று. மிகுந்த வெயிலில் மரம் பட்டுப்போவதுண்டு.

புன்னை மரம் அடர்த்தியான இடங்களில் - தோப்புபோல இருக்கும் மரங்களை இந்தப் பாடல் நினைவுகூரவில்லை. மன்றத்துப் புன்னை என மருள்நீக்கியார் தன்நிலை விளக்கம் செய்கிறார்.

நிழல்தரும் மரங்கள் பல உண்டு : ஆலமரம், வேப்பமரம், அரசமரம், மருதமரம், ஊர்நடுவே இருப்பதுண்டு, அங்கே அந்த நிழலில் - ஊர்ப் பஞ்சாயத்து முதலியன முன்பு நிகழும். குறிஞ்சி, முல்லை, மருதம் முதலிய நிலங்களுக்கு முன்பு பொருந்தும்.

நெய்தல் நிலம் - பாலை நிலம் போன்று மணல் சார்ந்தது. இங்கே பெரிய மரங்கள் முளைக்க வாய்ப்பில்லை. புன்னை மரமே கடல் சார்ந்த

இடங்களின் இருப்பிடம். இப்புன்னை நிழலை கடல்வாழ் பரதவர் போற்றி வாழ்வார்கள். புன்னை அரும்பு முத்துப்போல வழிப்போவாரை மயக்கும் என்று இலக்கியம் பேசும்.

> *"புன்னை அரும்பு ஏய்ப்பப் போவாரைப்*
> *பேதுறுக்கும் புகாரே எம்மூர்"*

என்பது தண்டி அலங்கார உதாரணப்பாடலாகும்.

மரம்படு துயரம் யாது?
இதற்கு உரை குறிப்பு :

ஊர்ப் பொதுமன்றத்தில் நிற்கும் புன்னை, பலராலும் கல்லெறியப்பட்டும், ஏறி அலைக்கப்பட்டும், சதாவருந்துவது போல, ஐம்பொறிகளால், சதா அலைக்கப்பட்டும் வருந்துவதன்றி ஒருவகையிலும் உணரமாட்டேன். அதை உணர்விக்கவல்ல உன்னையும் உள்ளத்தில் நிலையாக வைக்கமாட்டேன். இந்நிலையில் சினம்மிக்க எமன்வந்து என்னை மீளவும் பிறப்பில் தள்ளுவதற்கு அணுகிக் கொண்டுள்ளான். அது கண்டு நான் சுழன்று போனேன் அதிகை வீரட்டத்துப் பெருமானே - என்பதாகும். இதன் பொழிப்புரை; பொருள் - தருமையாதீன உரை நன்கொடை : "மரம்படு துன்பம், காற்றும், நீரும், நிழலும், வெயிலும் மிகுதல்" என்பதாகும்.

உவமை நான்கு வகை என்பர் : வினை, பயன், மெய், உரு எனப்படும். புன்னை மரம் படும் துன்பமே உவமையாயிற்று; இது வினையால் பெறப்படும் உவமை. நீரில் நனைதல், வெயிலில் வாடுதல், காற்றால் அலைக்கப்படுதல், நிழலில் தங்கியோர் செய்யும் இலை பறித்தல், கிளை ஒடித்தல், சிறுவர்கள் புன்னைக்காய் பறிக்க கல்எறிதல் முதலிய செயல்கள் எல்லாப் புன்னை மரங்கட்கும் வாய்க்காதன; மன்றத்தில் - ஊர்ப்பொதுவில் இருக்கும் மரத்திற்கு மட்டும் இத்துன்பங்கள் வந்து சேரும். இதனையே மருள்நீக்கியார், உற்றுநோக்கி தன்துன்பத்திற்கு புன்னைமரத் துன்பத்தை ஒப்பிட்டுக் காட்டினார்.

"உயர்ந்த தன் மேற்றே உள்ளுங்காலை" என்று தொல்காப்பியர், நூற்பா மூலம், உவமை எனப்பட்டது உயர்ந்த பொருளாகல் வேண்டும் என்று அறிவிப்பார். துன்பக் கொள்கலனுக்கு புன்னை நல்ல உவமை, மருள்நீக்கியார் பெயரமைந்த அப்பரடிகள் மருள்நெறி பற்றி மீண்டு வந்தவர். புன்னைமரம் தன்துயரத்தை வராமல் காத்துக்கொள்ளும்

வன்மை இல்லை. அஃது அஃறிணைப்பொருள். ஆனால் பகுத்தறிவுடைய உயர்திணை மனிதராகிய நாம் துயரம் வராமல் காத்துக்கொள்ளும் வன்மை உண்டு.

"எதிரதாக் காக்கும் அறிவினார்க்கு இல்லை!
அதிர வருவதோர் நோய்" – என்று

அறிவுடைமை கொண்டு துன்பத்தைத் துரத்தலாம் என்பர் வள்ளுவர்.

அதற்கு ஓர் உபாயம் :

இறைவனை உள்ளத்தில் எழுந்தருளவைத்தல் ஆகும். அவனே தானே ஆகிய அந்நெறி ஏகனாகி இறைபணியில் நிற்றல் ஆகும். அப்பர் தன்னிலை விளக்கம் செய்து அனைவரையும் அரனெறியில் பயணிக்க வைக்கும் அரிய தேவாரப்பாட்டு இது!

இறுதிக் காலத்தை இன்பமாய்க் கழிக்க வழியிராமல், எமன் வரப்போவது தெரிந்தும், இறைபணியில் நில்லாமல், மாறுபட்ட நெறி சென்று அலக்கழிக்கப்பட்டேன் – என்று தன் வாழ்வின் முன்னை நிலையை உணர்த்தும் இப்பாடல் சிந்திக்கத்தக்கதாகும்.

"திலகவதியார் மூலம் உபயம் பெற்று அபாயம் நீங்கினேன். இனி எம்பெருமான் திருவடியே எண்ணுவன்" என்பது இப்பாடற்பொருள் தரும் எச்சமாகும். இத்தேவாரப்பாடலின் முடிந்த பொருள் :

புன்னைமரம் துன்பம் வராமல் காத்துக் கொள்ளும் அறிவு இல்லை. "அருள்மன்னர்" அருளால் அவர்க்கு அடிமைப்பட்டு, நாம் உய்வு பெறலாம்; அதற்கு அவனை அறியும் அறிவு வேண்டும். அவ்வறிவால் துன்பம் வராமல் காக்கலாம் என்பது முடிந்த பொருளாகும்.

முயற்சியை ஒருபோதும் விட்டுவிடாதீர்கள்!
எப்போதும் உங்களை நேசிக்கவும்,
உங்கள் மீது அன்பு செலுத்தவும்,
உங்களை அப்படியே,
நீங்கள் இருப்பது போல ஏற்றுக்கொள்ளவும்,
சிலர் இருக்கின்றார்கள் – எனவே
தொடர்ந்து சாதிக்கும் முயற்சியை விட்டுவிடாதீர்கள்!

– நிக் வியூஜிசிக்

முக்கூட்டு அதிகாரத்தின் முக்கியத்துவம்

(முனைவர். மு. பழனிஇராகுலதாசன்)

(2015, மே, 16-ஆம் நாள் நிகழ்ந்த 152-ஆம் சிந்தனை நந்தவனம் நிகழ்ச்சியில் ஆற்றிய உரையின் கட்டுரையாக்கம்)

இன்றைய சிந்தனை நந்தவனத்தின் ஆய்வுக்குரிய திருக்குறள் அதிகாரம் "நாடு" என்னும் அதிகாரம். பொருட்பாலில், 74-ஆம் அதிகாரமாக இடம்பெற்றுள்ள இப்பகுதியின் ஒன்பதாம் குறளின் ஒரு தொடர் ஆய்வுக்குரிய பகுதியாக அமைகிறது. அதாவது, "நாடு என்ப நாடாவளத்தன..." என்பது வடிவமைக்கப்பட்ட தலைப்பு. இந்தத் தலைப்பின் வழியாக, அதிகாரம் முழுவதையும் ஆராய்ந்து பார்ப்பதே நமது நோக்கமும் தேவையும் ஆகும்.

"நாடு" என்ற அதிகாரத்தை, அதன் பொருளை மணக்குடவர் சுருக்கமாகவும் எளிமையாகவும் சுட்டிக்காட்டுவார். "நாடாவது நாட்டின் இலக்கணம் கூறுதல்" என்பார். அதிகாரத்தைப் புரிந்துகொள்ளவும், புரிந்துகொண்டு உள்ளே புகவும் மணக்குடவரின் இந்த எளிய, சுருக்கமான விளக்கமே நமக்குப் போதுமானதாகும். திருக்குறளை ஆழ்ந்து பயில்வதற்குப் பரிமேலழகரின் பகுப்புமுறை பெரிதும் பயன்படுவதுதான் என்றாலும் நமது அணுகுமுறைக்கு ஏற்ப, இன்ன, இன்ன குறள்களில் இன்ன, இன்ன கருத்துக்கள் சொல்லப்பட்டுள்ளன என்று நாம் பிரித்து வகுத்துக்கொள்வது முரணான அணுகுமுறை ஆகாது. எனவே குறட்பாக்கள் கூறும் கருத்துக்கள் அடிப்படையில் பின்வருமாறு பிரித்துக்கொள்கிறோம். இத்தகைய பிரித்தாளுகை எவ்வகையிலும் குறளாசானது கருத்துக்கோவைக்கு முரண்செய்வது ஆகாது. அதிகாரத்தின் ஒட்டுமொத்தச் செய்தி "வளம்" என்னும் சொல்லாக்கத்திற்குள் வந்துவிடுவதால்,

(i)	இயற்கை வளம் -	6,7,8 ஆம் பாடல்களில்,
(ii)	பொருள் வளம் -	2,3,8 ஆம் பாடல்களில்,
(iii)	மனித வளம் -	1, 4, 5 ஆம் பாடல்களில்
(iv)	அரசு - அரசியல்வளம் -	10 ஆம் பாடலில்

பேசப்படுகின்றன என்று நாம் பகுத்துக்கொள்ளலாம்.

இயற்கைச் சீற்றத்தால், எதிர்பாராத சில செயற்கைச் சூழலால் கேடு நேராததாக நாடு இருக்கவேண்டும்; அப்படி நேர்ந்துவிட்டால் அழியாத வளம் நிரம்பியதாய் நாடு விளங்க வேண்டும்; அத்தகைய நாடே தலைசிறந்த நாடு (736). ஏரி, குளம், எனத் தேங்கும் நீரும், ஆறு, ஓடை என்ற ஓடும் நீரும், உயர்ந்த மலைகளும், வான்மழைநீரும், பிற செயற்கை அரண்களும் ஒரு நாட்டிற்கு உறுப்புக்களாகும் (737) தேடத் தேவையின்றி, தன்னிறைவு வளம் உடையதே நாடு; தேடி அலையும் வண்ணம் இருப்பது நாடாகாது (739). அனைத்து வகைப் பொருள்வளமும் பெற்று, கேடில்லாமல் விளைவதே நாடு (732); துயரச் சுமைகள் வரும்போது, அதைத்தாங்கி அரசனுக்கு உரிய வரிப்பொருளைத் தருவதே உயர்ந்த நாடு (733); பிணியில்லாமல், பொருள்வளம், விளைச்சல், பாதுகாப்பு ஆகிய கூறுகள் உடையதே நாடு (738); மாறாத விளைச்சலும்; சான்றோரும், வளம் குன்றாத செல்வரும் ஒருங்கிணைந்த மனிதவளம் உடையது நாடு (731); மிக்க பசியில்லாத, தீராத நோயில்லாத, செறு பகையில்லாத மனிதவளம் உடையது நாடு (734); குழுமனப்பான்மை இல்லாத, உட்பகை இல்லாத, கொல்குறும்பு இல்லாத மனிதவளம் உடையதே நாடு (735); இவ்வாறு மேலே சொல்லப்பட்ட அனைத்தும், அமைந்திருந்தாலும், நாட்டுக்கு நல்ல வேந்தன் அமையவேண்டும்; இல்லையெனில் பயனில்லை (740). மேலே கண்ட நான்கு வகைப்பகுப்பு வழியில் அதிகாரத்தின் திரண்ட பொருள் யாது என அறிந்துகொள்கிறோம்.

இனி, "நாடு" என்ற அதிகாரத்தின் சிறப்புக் கூறுகளைக் காணவேண்டும். நமது பெரிய குருமகாசந்நிதானம் அவர்கள், குறளைப் பயில்வோர்க்கு ஓர் அரிய யோசனை சொல்வார்கள். "அதோ வள்ளுவர் நமக்கு முன்பாக நடந்து செல்கிறார்; அவரைப் பின்பற்றிச் சிறிது தொலைவு, சில அடிகள் நாம் போகவேண்டும்; அப்படிச் சிறிது தொலைவு பின்பற்றிப் போனால் திருவள்ளுவர் நம் பக்கம் திரும்பி நம்மைப் பற்றிக் கொள்வார்" என்பார்கள். இந்த அதிகாரம் முழுவதையும் ஒரு முறை வாசித்து வள்ளுவரைச் சிறிது பின்பற்றிச் சென்றால் வள்ளுவர் நம்மை அப்படித்தான் ஈர்த்துக்கொள்கிறார். அந்த ஈர்ப்பில் நமக்குப் பல உண்மைகள் புலப்படுகின்றன. வள்ளுவர் மிக நுணுக்கமாக மூன்று புள்ளிகள் இட்டு, அவற்றை இணைத்து, அதிகாரத்தை ஒரு முக்கூட்டு அதிகாரமாக நமக்கு வரைந்து காட்டுகிறார். "நாடு - அரசன் - மக்கள்" என்பனவே அந்த மூன்று புள்ளிகள்; இந்தப் புள்ளிகளை இணைத்து ஒரு

முக்கூட்டு அதிகாரத்தைப் பாடுவதன் மூலம் வள்ளுவர் ஒரு தலைசிறந்த குடியரசை நிறுவுகிறார் என்று அறிஞர் தெ.பொ.மீ; புலவர்.மு. அண்ணாமலை முதலான பெருமக்கள் சுட்டிக்காட்டுகின்றனர். வள்ளுவரின் அரசியலைச் "சமுதாய அரசியல்" என்று பாராட்டும் அறிஞர் கா. அப்பாதுரையார், வள்ளுவரை பிளேட்டோ, சாக்ரட்டீஸ் ஆகியோருடன் ஒப்பிட்டு, காலத்தால் இவ்விரண்டு மேலை நாட்டுச் சிந்தனையாளர்களுக்கும் முந்தியவரான வள்ளுவர் இவர்களைச் சிந்தனையால் கடந்து உயர் முகட்டில் நிற்கிறார் என்றும் சுட்டிக்காட்டுகிறார்.

நாடு - அரசன் - மக்கள் என்பதான முக்கூட்டு அரசியலில் வள்ளுவனின் கவலையும் கவனமும் நாடு பற்றியும், நாட்டின் நிலை பற்றியும் வெகு ஆழமாகவே செல்கிறது. உறுபசியும், ஓவாப்பிணியும், செறுபகையும் சேராது இயல்வது நாடு என்று வலியுறுத்துகிறார். அடுத்து வள்ளுவர் அழுத்தமாக எடுத்துரைத்துக் கவலைப்படுவது பல்குழுவும், பாழ்செய்யும் உட்பகையும், வேந்தலைக்கும் கொல் குறும்பும் பற்றியே ஆகும். "வேந்தலைக்கும்" என்ற அடைமொழியை "பல்குழு" "உட்பகை" "கொல்குறும்பு" ஆகிய மூன்றுக்குமே பொருத்திப் பார்த்துச் சிந்திக்கலாம்; அப்படிச் சிந்திக்கும்போது மூன்றும் அரசனை, அல்லது அரசாட்சியை அலைக்கழிவுக்கு ஆளாக்கும் ஒரு சீரழிவு நிலை நமக்குப் புலப்படும். இந்தக் குறளுக்கு உரை எழுதும் போது கவிஞர் சிற்பி, "கொல் குறும்பு" என்பது "வன்முறைக்கும்பல்" என்று எழுதுகிறார். பல்குழு என்றாலும் அது வன்முறைக் கும்பல்தான்; உட்பகை என்றாலும் அதுவும் வன்முறைக் கும்பல்தான் என்று சிற்பியின் அரிய சொல்லாக்கத்தை மேலும் விரிவாக்கம் செய்து கொள்ளலாம். "பல்குழு", "உட்பகை". "கொல் குறும்பு" எனப்படுவதான வன்முறைக் கும்பல்களின் தீய செயல்பாடு எப்படியெல்லாம் ஓர் அரசாங்கத்தைப் பாழ்படுத்துகின்றன என்பதை இக்கால நடவடிக்கைககள் கொண்டு உணரலாம்.

சிற்சில குறைபாடுகள் இருந்தாலும் இந்தியா என்பது ஒரு மிகப்பெரிய சனநாயக நாடு; தேர்தல் ஆணையம் இருக்கிறது; அதற்கென்று சட்டவிதிமுறைகள், அதிகாரங்கள் இருக்கின்றன. மிகச்சிறந்த ஜனநாயகவாதிகளான பண்டித சவகர்லால் நேரு, அறிஞர் அண்ணா போன்றவர்கள் மக்கள் மத்தியிலும் மன்றங்களிலும் சிறந்த மரபுகளைப் போற்றிக் காப்பாற்றியவர்கள். இவர்கள் காலத்திய அரசுகளையும் நாட்டையும் வன்முறையாளர்கள் படுத்திய பாடுகளை

அறிவோம். இவர்கள் நம் காலத்திய அரசியல் முறைகளுக்கு ஏற்பப் பலவேறு ரூபங்களில் வருவார்கள்; சிலர் திடீரெனப் புதிய புதிய கட்சிகள் தொடங்குவார்கள்; சிலர் தேர்தல்காலங்களில் "சுயேட்சை" வேட்பாளர்கள் என வேடம் கொள்வார்கள். இந்தத் திடீர்க் கட்சிக்காரர்களாலும், சுயேட்சை வேட்பாளர் எனப்படுபவர்களாலும் நமது இந்திய, தமிழக அரசுகளும், தேர்தல் ஆணையமும் சந்தித்த இடர்ப்பாடுகள் மிக மிக அதிகம்! இந்திய சனநாயக அமைப்பைக் காப்பாற்றவும் வலுப்படுத்தவும் "சுயேட்சை" வேட்பாளர் என்பதை அகற்றிவிடலாம் என்ற சிந்தனை அகில இந்திய அளவில் தோன்றியுள்ளன. உண்மையிலேயே சுத்தமான, சுதந்திரமான "சுயேட்சை" வேட்பாளர் எனப்படுவோர் இருக்கிறார்களா? ஏதோ ஒரு தோல்வியால், ஏமாற்றத்தால்தான் பெரும்பாலான சுயேட்சை வேட்பாளர் திடீர் பிர்வேசம் செய்கிறார்! சாதியும், மதமும், பணமும் அந்தச் சுயேட்சைகளை உருவாக்கி முன்தள்ளுகின்றன. விளைவு? இந்திய சனநாயகம் தள்ளாடுகிறது. அந்த அரசு அமைகிற நாடு குறித்து வள்ளுவர் மிகவும் கவலைப்படுவது நியாயம்தானே!

"நாடு – அரசு – மக்கள்" என்ற முக்கூட்டு சனநாயகச் சிந்தனை தழுவிய "நாடு" என்ற அதிகாரத்தில், முதலாம் குறளில் இடம் பெற்றுள்ள "தாழ்விலாச் செல்வர்" என்ற சொற்பிரயோகமும், பத்தாம் குறளில் இடம் பெற்றுள்ள "வேந்தமைவு" என்ற சொற்பிரயோகமும் நம்முடைய தனிக்கவனத்துக்கும் நீண்ட, மிக ஆழமான விவாதத்துக்கும் உரியன. "தாழ்விலாச் செல்வர்" என்ற சொற்பிரயோகம் குறித்துத் தவத்திரு பெரிய சந்நிதானம் அவர்கள் நடத்தியுள்ள விவாதம் அபூர்வமான விவாதம் ஆகும். ஒரு குறிப்பிட்ட ஆள் "செல்வர்" என்றால் அவர் எப்படிச் செல்வர்? எந்த வகையில் செல்வர்? என்று ஆராயவேண்டும் என்கிறார்கள் பெரிய அடிகள். அந்தக் குறிப்பிட்ட செல்வரையும், அவரது செல்வத்தையும் எடைபோட்டுப் பார்க்கவேண்டும்; அவரது வாழ்நிலை என்ன? அவரது உழைப்பு என்ன? அவரது திறமை என்ன? என்றெல்லாம் கேட்டு அவரை எடைபோட்டுப் பார்க்கவேண்டும். "அவரது உழைப்பும் செல்வமும் சமநிலையில் இருக்கவேண்டும்; அவரே "தாழ்விலாச் செல்வர்" ஆவார். உழைப்பு என்ற தட்டு உயர்ந்தும், "செல்வம்" என்ற தட்டு தாழ்ந்தும் சமநிலை இன்றிக் காணப்பட்டால் அவர் தாழ்வுடைச்செல்வர் ஆவார்; நாம் விரும்புவது, நமது எடைபோடும் கணக்கில் சமநிலையில் இருக்கும் தாழ்விலாச்செல்வரையே! என்பது குருமகாசந்நிதானம் அவர்களின் சொற்பிரயோக எடைபோடுதல் ஆகும். தவத்திரு குருமகா சந்நிதானம்

இவ்வாறு உரையும், உரைநுட்பமும் கண்டுரைத்துப் பல ஆண்டுகள் கழிந்துபோயின! ஆனால் தமிழ்கூறும் நல்லுலகம், ஆராய்ச்சி உலகம், இலக்கிய உலகம் கண்டுகொள்ளவில்லை! "தாழ்விலாச்செல்வர்" என்ற குறளாட்சி எத்தனை நூற்றாண்டுகளுக்கு முந்தியது! அதன் பழமையை எண்ணி மகிழ்ந்துபோன தவத்திரு குருமகாசந்நிதானம் "இந்தச் சொல்லாட்சி, தமிழின் "மார்க்சியச் சிந்தனையின் தொடக்கம்" என்பதையும் மிகக் கூர்மையான பார்வையுடன் பதிவுசெய்கிறார்கள்!

ஒருவர் தாழ்விலாச் செல்வரா? அல்லது தாழ்வுடைச் செல்வரா? என்று யார் எடை போடுவது? எடைபோட்டு அறிவிப்பது யார்? இந்தக் கேள்விக்கும் அடிகள் பதில் கூறுகிறார்கள். அந்தப் பணியை அரசுதான் செய்யவேண்டும் என்று வற்புறுத்துகிறார்கள். இது மாதிரியான சிக்கலான நேரங்களில் அரசுதான் பொறுப்பு ஏற்கவேண்டும் என்பது வள்ளுவரின் கருத்து; அது அரசின் கடமை என்று குருமகாசந்நிதானம் பிறிதோரிடத்தில் பதிவு செய்கிறார்கள். "அவ்விய நெஞ்சத்தான் ஆக்கமும், செவ்வியான் கேடும் நினைக்கப்படும்" (169) என்ற குறளுக்குக் காலம் காலமாக, தொடர்ந்து, "ஆராயப்படும்", "பரிசீலிக்கப்படும்" என்றவாறே தமிழ்கூறும் நல்லுலகம் எழுதியது; எழுதிக்கொண்டே வந்தது. ஆனால் தவத்திரு சந்நிதானம்தான் இந்த வேறுபாட்டுக்கு, சமுதாய முரண்பாட்டுக்குக் காரணம் என்ன? "அரசு" ஆராயவேண்டும்; நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று எழுதினார்கள். இன்னும் இதுகுறித்துத் தெளிவுபடுத்தும் நோக்கில் "ஆராய்ந்து அரசுதான் ஒரு முடிவுகட்ட வேண்டும்; இது அரசுக்கு வள்ளுவர் வைக்கும் ஆணை" என்றே தெளிவுபடுத்தினார்கள்.

அடுத்து, பத்தாம் குறளில் இடம்பெறும் "வேந்தமைவு" என்ற சொல்லாட்சி. இந்தச் சொல்லுக்கும் சொல்லின் ஆட்சிக்காகவுமே வள்ளுவர் ஏனைய பிற ஒன்பது குறள்களையும், வேக வேகமாகச் சொல்லிவிட்டு ஓடிவருவது போலத் தோன்றுகிறது. "நாடு" என்பது முக்கூட்டின் தலைமைப் புள்ளி என்றால், அரசு, மக்கள் என்ற இரண்டு புள்ளிகளும் மையம் கொள்ளும் இடம் இந்த "வேந்தமைவு" என்ற சொல்லாட்சி ஆகும். "வேந்தமைவு" இல்லையென்றால் நாடே இல்லை என்று முரசறைகிறார் வள்ளுவர். இந்த இடம்தான் வள்ளுவரை மிகச்சிறந்த அரசியல்ஞானி எனக்காட்டுகிற இடம். "வேந்தமைவு" என்ற சொல்லையும், அதன் உட்புறத்து ஒளியையும் பரிமேலழகரும், மொழிஞாயிறு பாவாணரும் மிகச்சிறப்பாகவே புலப்படுத்தி

எழுதியுள்ளார்கள். "வேந்து அமைவு" எனவே, குடிகள் அவன்மாட்டு அன்புடையராதலும், அவன்தான் இவர்மாட்டு அருள் உடையனாதலும் அடங்கின" என்று பரிமேலழகர் அற்புதமாய்க் குறிப்புரை நல்கினார். இத்தகைய நல்லுரையைக் கண்டு மகிழ்ந்து போனவராய் பாவாணர் தமது உரையை மேலும் செழுமை செய்தார். "தந்தைக்கும் மக்கட்கும் நேர்த்தம் இல்லாத குடும்பம் கெடுவது போல, அரசனுக்கும் குடிகட்கும் நேர்த்தமில்லாத நாடு கெடும் என்பது கருத்து" என்பது பாவாணர் தரும் அரிய விளக்கம். கோலோச்சும் மன்னனுக்கும், வாழும் குடிகளுக்கும் இடையிலான உறவு குடும்ப உறவு என்று தெளிவுறுத்திய பாவாணர் உரை தலைமேல் கொள்ளத்தக்க உரை.

"நாடு" – அதிகாரத்தின் பத்தாம் குறள் ஓர் எச்சரிக்கைக்குறள். எதிர்மறை முகத்தான் குடியாட்சியின் சிறப்பைச் சுட்டிக்காட்டும் குறள். ஆட்சியாளருக்கும் மக்களுக்கும் ஒரு நல்லுறவு, ஒரு புரிந்துணர்வு, ஓர் இணக்கம் இல்லாமல் போனதால் இந்திய அரசியலில், தமிழ்நாட்டு அரசியலில் நிகழ்ந்துபோன இடர்ப்பாடுகள் அதிகம். சிலவற்றை இங்கே நினைவுகூர்வது பொருந்தும்; இந்த, நம் காலத்திய நினைவுகூரல் வள்ளுவப் பேராசானின் அரசியல் ஞானத்தைத் துலக்கிக் காட்டுவதாகவும் அமையும்.

இந்தியாவின் மிகக் கடுமையான பிரச்சனை நிலம்தான்; இதனை அண்ணல் காந்தியடிகள் மிக நன்றாகவே உணர்ந்திருந்தார். "விடுதலை பெறும் இந்தியாவில் எது முக்கியமான பிரச்சனையாக இருக்கக்கூடும்" என்று அமெரிக்கப் பத்திரிகையாளர் லூயி – பிஷர் கேட்டபோது, சிறிதும் தயக்கமின்றி, "ஏன்? நிலமும் நில உடைமையும் தான் பெரிய பிரச்சனையாக இருக்கும்? என்று அண்ணல் பதில் உரைத்தார். "என்ன செய்யப் போகிறீர்கள்? என்று பிஷர் தொடர்ந்து கேட்டபோது, "இதில் செய்வதற்கு என்ன இருக்கிறது? நிலம் இல்லாதவர்கள் நில உடைமையாளர்களிடமிருந்து எடுத்துக்கொள்வார்கள்" என்று அண்ணல் மேலும் பதில் சொன்னார்கள். இந்திய நிலப்பிரச்சனை தொடர்பான மகத்தான உரையாடல் இது. விடுதலை வந்தது; அண்ணலும் போய்விட்டார்; அதன் பிறகு வினோபா அடிகள் நிலப்பிரச்சனைக்குத் தீர்வாக வேறு ஓர் உருவம் தந்து களத்தில் இறங்கினார்; வெற்றிகிட்ட வில்லை. இவற்றையெல்லாம் உன்னிப்பாகக் கவனித்த பண்டித

சவகர்லால் நேரு நிலம் தொடர்பாகச் சில சீர்திருத்தம் கொண்டுவர விரும்பினார்கள்; அண்ணலும், அவரது சீடர் வினோபாபாவேயும் அதிகாரத்தில் இல்லை, எனவே எந்த ஒரு சீர்திருத்தமும் செய்யமுடியவில்லை, நாம் ஆட்சிப் பொறுப்பில் இருக்கிறோம், பாராளுமன்றத்தில் காங்கிரஸ் பேராயக்கட்சி பெரும்பான்மை பெற்றுள்ளது; இந்த சந்தர்ப்பத்தில் நில உடைமை தொடர்பாகச் சில சீர்திருத்தங்களைக் கொண்டுவருவோம் எனச் சிந்தித்துப் பாராளுமன்றத்தில் நிலச்சீர்திருத்த மசோதாவை முன்மொழிந்தார்! மிக நம்பிக்கையுடன் முன்மொழிந்தார்! இந்தியப் பிரதமர், அவரது கட்சி பெரும்பான்மை பெற்றுள்ள பாராளுமன்றத்தில், கொண்டுவந்த மசோதா தோற்கடிக்கப்பட்டுவிட்டது! ஜனநாயகபூர்வமான ஓர் அரசுக்கும், நாட்டு மக்களுக்கும் இடையே ஓர் உறவு, ஓர் புரிந்துணர்வு அமைவு இல்லாத காரணத்தால் ஏற்பட்ட மாபெரிய தோல்வி. இந்தியப் பாரளுமன்றக் குடியரசு ஆட்சியில் இப்படியொரு விபரீதம், விபத்து, ஆட்சிச் சறுக்கல் நிகழ்ந்துவிட்டதே என்று தவத்திரு பெரிய சந்நிதானம் தங்களுடைய "மண்ணும் மனிதர்களும்" என்ற அரிய நூலில் மிகுந்த ஆதங்கத்தோடு இச்செய்தியைப் பதிவு செய்திருக்கிறார்கள்! "படித்த பெருமக்கள் எண்ணிப் பாருங்கள்; படிக்கும் வாய்ப்புப் பெறாதவர்கள் நூலைத் தேடிப் படியுங்கள்!" "வேந்தமைவு" இல்லாத காரணத்தால் இந்திய அரசியல் சமுதாய வரலாற்றில் நிகழ்ந்துவிட்ட இமாலயச் சறுக்கல்! நிலச்சீர்திருத்த மசோதா தோற்கடிக்கப்பட்ட காரணத்தால் பண்டித சவகர்லால் நேரு மனம் உடைந்து போனார்; மறைந்தும் போனார்.

தமிழகத்தில் வரலாற்றுப்புகழ் மிக்க ஒரு நிகழ்ச்சி. தமிழ்நாடு பூமிதான போர்டுக்கூட்டம் கூடியது. பூமிதானம், கிராமதானம், கிராம அபிவிருத்தி என்று விவாதம் நடந்தது. பூமிதானக் கொள்கையின்படி கிராம ஏழை – உழைப்பாளி மக்களுக்கு நிலங்கள், கருவிகள் வழங்குதல் பற்றியெல்லாம் பேசப்பட்டன. அந்தச் சிறப்பு நிகழ்ச்சியில் மாநிலமுதல்வர், பெருந்தலைவர் காமராசரும், பேராசான் ஜீவாவும் பங்கேற்று அமர்ந்திருந்தனர். கிராம மக்களின் வாழ்வாதாரம், நில உரிமை என்றெல்லாம் பேசப்பட்டது. முதல்வர் காமராசர், ஜீவாவின் பக்கம் திரும்பி, "வேறு என்ன செய்யலாம் சொல்லுங்கள்" என்று கேட்டார். சர்வோதய செயல்பாடு, நிலதானம், உழைப்பாளர் மேம்பாடு ஆகிய விவாதங்களையும், அடைந்திருந்த வெற்றி விவரங்களையும்

ஆர்வத்தோடு கவனித்து மகிழ்ந்துபோயிருந்த பேராசான் ஜீவா, முதலமைச்சர் காமராசரிடம், "எல்லாம் சரி, ரொம்ப மகிழ்ச்சி; நம் உழவர் பெருமக்கள் உற்பத்தி செய்யும் விளைபொருள்களைக் கூட்டுறவு முறையில் விற்பனை செய்வதற்கான ஏற்பாட்டையும் அரசாங்கம் செய்ய வேண்டும்" என்றார். ஏழை விவசாயப் பெருமக்கள் உற்பத்தி செய்யும் விளைபொருள்களை அரசே விலைநிர்ணயம் செய்து கூட்டுறவு முறையில் வாங்கி, விற்பனை செய்யும் பொருளாதார நடைமுறை இன்றளவும் நடைமுறைக்கு வரவில்லை; தனியார் விலைவைப்பதும், விற்பதுமான "ஆன் – லைன்" வியாபாரம் நாடெங்கும் வெகுவிமரிசையாக நடக்கிறது. போபால் விஷவாயு கசிவும் அதன் பாதிப்பும் வெளிநாட்டு கம்பெனிகளின் ஆக்கிரமிப்பும் பெரிய பெரிய முதலாளிகள் வாங்கிய கோடிக்கணக்கான ரூபாய் வராக்கடன் அறிவிப்பும் பொதுமக்களின் எதிர்ப்பையும் மறுப்பையும் மீறி நிலங்களைக் கையகப்படுத்துவோம் என்ற அரசின் நிலபாடும்.... இவையெல்லாம் இந்தியாவில் தமிழகத்தில் உள்ள இக்கட்டான நிலைமையைத்தான் நமக்கு எடுத்துக்காட்டுகின்றன.

இவ்வாறு "நாடு" என்ற அதிகாரத்தில் "நாடு – அரசு – மக்கள்" என்ற முக்கூட்டுச் சிந்தனையை நமக்கு அளித்த பேராசான் வள்ளுவன் வெறும் அரசியல் சிந்தனையாளன் மட்டுமல்ல, பிளேட்டோ, அரிஸ்டாட்டில் போன்றோர் வரிசையில் வைத்து எண்ணத்தக்க ஓர் அரசியல் ஞானியும் ஆவார் என்பதை மனத்தில் பதியவைத்துக்கொள்வோமாக!

விடாமுயற்சி!

கவியரசர் கண்ணதாசனுக்கு 14 குழந்தைகள். அனைவரையும் ஒரே பள்ளியில்தான் படிக்கவைத்தார். ஒருமுறை அந்தப் பிள்ளைகளில் நான்கு பேர் தேர்வில் தோல்வியடைந்தார்கள். தோற்றுப்போன மகன்களுக்கு 200 ரூபாய் கொடுத்து உற்சாகப்படுத்தினார். தேர்வில் வெற்றி பெற்ற பிள்ளைகளுக்கு 100 ரூபாய் கொடுத்தார். ஊக்கம் பெற,

"இது என்ன நியாயம்?" என்று வெற்றி பெற்ற பிள்ளைகள் கேட்டனர். மகிழ்ச்சியில் எந்தப் பரிசு கிடைத்தாலும், அது மேலும் சந்தோஷத்தைத் தரும். ஆனால் துன்பத்தில் இருப்பவர்களைத்தான் தேற்றுவது சிரமம். அவர்களைக் காயப்படுத்தாமல் இருப்பது அவசியம். ஆனால் நம்மிடம் எப்போதும் இருக்க வேண்டிய விடா முயற்சி. அந்த முயற்சியை எப்போதும் விடக்கூடாது என்பதற்காக 200 ரூபாய் கொடுத்தேன் என்று விளக்கம் தந்தார் கண்ணதாசன்.

குன்றக்குடியில் அருள்தரு சண்முகநாதப் பெருமானுக்கு விசாகவிழா

குன்றக்குடியில் கலியுக வரதனாய் கண்கண்ட தெய்வமாய்த் திகழ்ந்துவரும் அருள்தரு சண்முகநாதப்பெருமானுக்கு 1.6.2015 திங்கட்கிழமையன்று விசாகவிழா வெகு சிறப்பாக நடைபெற்றது.

அன்று காலை 7.15 மணி அளவில் திருக்கோயிலிலிருந்து அருள்தரு சண்முகநாதப் பெருமான் வெட்டிவேர் அலங்காரத்துடன் மேள தாளங்கள் முழங்க மெய்யன்பர்கள் தொடர குன்றக்குடித் திருவண்ணாமலை ஆதீனம் நோக்கிப் புறப்பட்டார். வழிநெடுகிலும் அதிர்வேட்டு வாணவேடிக்கைகள், மங்கல மங்கையர்களின் ஆரத்தி வரவேற்பு என எழுந்தருளிவந்தார் பெருமான் கீழரத வீதி, தெற்குரதவீதி, சந்திப்புக்கு வந்ததும் ஆதீனத் திருமடத்திலிருந்து யானைமுன் செல்ல நாதசுர இன்னிசை முழங்க மங்கல மாதர்களும் அன்பர்களும் சீர்வரிசை ஏந்திச் சென்று அருள்தரு சண்முகநாதப் பெருமானை வரவேற்றுத் திருமடத்திற்கு அழைத்து வந்தனர். திருமடத்து முகப்பில் திருவருள்திரு குருமகாசந்நிதானம் தவத்திரு பொன்னம்பல அடிகளார் அவர்கள் எதிர்கொண்டு அழைத்து பெருமானுக்குப் பொன்னாடை சார்த்தி தீபாராதனை நடத்தி திருமடத்து வசந்த மண்டபத்துக்கு அழைத்து வந்தார்கள். வசந்த மண்டபத்துக்குள் வேதபாராயாணம் நாதசுர இசை, திருமுறைப்பண்ணிசை முழங்க மும்முறை வலம்வந்து அருள்தரு சண்முகநாதப் பெருமான் வசந்த மண்டபம் மைய மண்டபத்தில் எழுந்தருளினார். அதன் பின் ஆறுகவிஞர்கள் வருகைத் தமிழ்ப்பாமாலை பாடிச் சிறப்பித்தனர்.

பகல் 11.30 மணியளவில் பெருமானுக்கு சிறப்புத் திருமுழுக்காட்டு நடைபெற்றுப் பச்சை சாத்துபடி செய்து சிறப்பு வழிபாடு நிகழ்ந்தது.

மாலை 5.30 மணியளவில் வலங்கைமான் திரு. எஸ்.ஏ.எஸ்.சந்திரசேகரன், திருவாவடுதுறை தவில் இசைத் தென்றல் திரு.சி.எஸ்.கே. மனோகர் குழுவினர், குன்றக்குடி ஆதீன நாதசுரவித்வான் திரு.சோம. முருகேசன் குழுவினர் ஆகியோரின் நாதசுர இன்னிசைக் கச்சேரி நடைபெற்றது.

இரவு 7.00 மணியளவில் பாராட்டுவிழா. திருவருள்திரு குருமகாசந்நிதானம் அவர்கள் தலைமைவகித்து, கோவை திரு. அழகு ஜெயபாலன் அவர்களுக்கு "அறமனச் செம்மல்" பட்டம் வழங்கிப் பாராட்டுப் பட்டயமும் வெள்ளிக் கேடயமும் வழங்கியும், புதுக்கோட்டை புலவர் திரு.தி.சு. மலையப்பன் அவர்களுக்குத் "திருக்குறட்செம்மல்" பட்டம் வழங்கிப் பாராட்டுப் பட்டயமும் வெள்ளிக் கேடயமும் வழங்கியும் பாராட்டி வாழ்த்துரை வழங்கினார். பாராட்டுப் பெற்றவர்களின் ஏற்புரைக்குப்பின், பேராசிரியர் திரு. குன்றக்குடி பெருமாள் அவர்களை நடுவராகக் கொண்டு "பெரியபுராணம் புதுமை செய்த நூலே என்பது குற்றம்" என்ற தலைப்பில் வழக்காடுமன்றம் நடைபெற்றது. பேராசிரியர் சங்கீத் ராதா அவர்கள் வழக்குத் தொடுத்துப் பேசினார். பேராசிரியர் ஆனந்த் அபூர்வசாமி வழக்கை மறுத்துப்பேசினார். பெரியபுராணம் புதுமை செய்த நூலே என்று தீர்ப்புரைத்தார் நடுவர். பேராசிரியர் சொ. சேதுபதி அவர்கள் நிகழ்ச்சி இணைப்புரை வழங்கிச் சிறப்பித்தார்.

இரவு 10 மணியளவில் அருள்தரு சண்முகநாதப் பெருமான் வெள்ளிரதத்தில் எழுந்தருளி திருவீதி உலாவந்து திருவருட்காட்சி நல்கியருள விழா இனிதே நிறைவெய்தியது.

அன்பான வேண்டுகோள்!

சமுதாய மாமுனிவராகத் திகழ்ந்த நமது அருள்நெறித் தந்தை தவத்திரு குன்றக்குடி அடிகளார் அவர்களின் ஆழமான சிந்தனைகளை அடியொற்றி நடைபோடும் "மக்கள் சிந்தனை" மாத இதழ் மேலும் பலம் பெறுவதற்குத் தங்களின் ஆதரவு தேவை. நமது கருத்து பரவலாக மக்களைச் சென்றடைய இதழ் அவசியம்.

ஆயுள் சந்தாவாகவோ, அல்லது ஆண்டுச் சந்தாவாகவோ அல்லது புரவலர் தொகையாகவோ மக்கள் சிந்தனை இதழுக்கு வழங்கி மக்களின் சிந்தனைகளை அகம்கொண்டு வெளிவர உதவுங்கள். "மக்கள் சிந்தனை"யின் பணி சிறப்புடன் தொடர வாசகராக, படைப்பாளராக சந்தாதாரராக விளம்பரதாரராக மாறுங்கள்; இன்றே சமய சமுதாயப் பணியை வலிமைப்படுத்துங்கள்.

– ஆசிரியர்

தூத்துக்குடி
உலகத்திருக்குறள் பேரவை கருத்தரங்கம்



உலகத் திருக்குறள் பேரவை தூத்துக்குடிக் கிளையின் சார்பில், சி.எம்.மேனிலைப்பள்ளி தாளாளர், தலைமையாசிரியர், உயர்ந்த மதிப்பெண் பெற்ற மாணவ, மாணவியருக்குப் பாராட்டு விழாவும், கருத்தரங்கமும் நடைபெற்றது.

உலகத் திருக்குறள் பேரவை, தூத்துக்குடி மாவட்டக் கிளையின் சார்பில் கடந்த கல்வியாண்டில் சி.எம். மேனிலைப்பள்ளியில் 12ஆம் வகுப்பில் 100 சதவீதம் தேர்வு பெற்றதற்கு பள்ளியின் தாளாளர் ஆ.திருச்சிற்றம்பலம், பள்ளித் தலைமையாசிரியர் மேரி சந்திரா, அரசு பொதுத் தேர்வில் 12ஆம் வகுப்பில் 1160 மதிப்பெண் பெற்ற மாணவி ஏஞ்சலின் சரோசினி, 10ஆம் வகுப்பில் 495 மதிப்பெண் பெற்ற மாணவன் விகே்னேசு-க்கும் பாராட்டுவிழாவும் உலகத் திருக்குறள் பேரவையின் மாதாந்திரக் கருத்தரங்கமும் பேராசிரியர் ச. சவகர்லால் தலைமையிலும், பேராசிரியர் கந்தசாமி முன்னிலையிலும் நடைபெற்றது. ஆசிரியர் தேவிகா வரவேற்றுப் பேசினார்.

புலவர் சங்கரலிங்கம் "புறநானூற்றில் மனிதநேயம்" என்னும் தலைப்பிலும், ஆசிரியர் அருமைநாயகம், "நாலடியாரில் பெண்மை" என்னும் தலைப்பிலும், "திருக்குறள்" மோ. அன்பழகன் "கலைஞரின் சங்கத்தமிழில் புறநானூறு" என்னும் தலைப்பிலும் உரையாற்றினார்கள்.

கூட்டத்தில் சக்திவேல், ஆசிரியர் மனோசேவியர், செயதர்மர், இன்பவாணன், பெருமாள், சங்கரன், அண்ணாமலை, தனபால், சுந்தரேசன், அமிர்தநாயகம் மற்றும் பேரவை உறுப்பினர்கள் கலந்து கொண்டார்கள்.

ஆசிரியர் வளர்மதி நன்றி கூறினார்.

– மோ. அன்பழகன்

குறைந்த வயதில் நிறைவான பணி இயற்றி வரலாற்றில் நிலை பெற்றோர்!

★	பாரதியார் வாழ்ந்த காலம்	39 ஆண்டுகள்
★	கட்டபொம்மன் வாழ்ந்த காலம்	30 ஆண்டுகள்
★	விவேகானந்தர் வாழ்ந்த காலம்	39 ஆண்டுகள்
★	ஆதி சங்கரர் வாழ்ந்த காலம்	39 ஆண்டுகள்
★	புதுமைப்பித்தன் வாழ்ந்த காலம்	42 ஆண்டுகள்
★	கவிஞர் தமிழ்ஒளி வாழ்ந்த காலம்	34 ஆண்டுகள்
★	பரிதிமாற் கலைஞர் வாழ்ந்த காலம்	33 ஆண்டுகள்
★	அண்ணல் ஏசுபிரான் வாழ்ந்த காலம்	33 ஆண்டுகள்
★	மாணிக்கவாசகர் வாழ்ந்த காலம்	32 ஆண்டுகள்
★	துறை மங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள் வாழ்ந்த காலம்	32 ஆண்டுகள்
★	இராமானுஜர் வாழ்ந்த காலம்	30 ஆண்டுகள்
★	மகாவீரருக்கு ஞானம் கிடைத்த வயது	30 ஆண்டுகள்
★	புத்தபிரானுக்கு போதிமரம் ஞானம் கிட்டியபோது வயது	30 ஆண்டுகள்
★	கவிஞர் பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் இறந்தபோது வயது	29 ஆண்டுகள்

அடிகள் வழங்கிய அற்புத நகைச்சுவை

கடந்த 1.6.2015 ஆம் நாள் திருமடத்தில் விசாக விழா வெகு சிறப்பாக நடைபெற்றது. பிற்பகல் நிகழ்வின்போது ஒருசிறப்பு நிகழ்ச்சியாக, சிவகங்கை மாவட்டத்தில் பத்து, பன்னிரண்டாம் வகுப்புத் தேர்வுகளில் சிறப்பிடம் பெற்ற மாணவ, மாணவியர் பாராட்டப்பெற்றனர். இந்தச் சிறப்பு நிகழ்ச்சியை செக்ரி நிறுவனத்தின் துணை இயக்குநர் உயர்திரு ராமு அவர்கள் தொகுத்து வழங்கினார்கள். அவர்களது தொகுப்புரையின்போது, "இந்த ஆண்டு, நமது திருமடத்தின் மேல்நிலைப் பள்ளியில், அரசுத் தேர்வில் பத்தாம் வகுப்பில் நூறுசதம் வெற்றி பெற்றிருக்கிறோம்; ஆனால் பன்னிரண்டாம் வகுப்பில், அதாவது "ப்ளஸ்டு" வகுப்பில் நூறுசதம் பெறவில்லை"... என்று சுட்டிக் காட்டினார்கள். தொடர்ந்து பேசும்போது, பேச்சுப்போக்கில், "வரும் கல்வி ஆண்டில் நமது பள்ளியின் மேல்நிலை வகுப்பிலும் நூறுசதம் வெற்றி பெறவேண்டும், அதற்கு நமது குருமகாசன்னிதானம் ஆவன செய்ய வேண்டும்" என்று குறிப்பிட்டார்கள்.

பேச்சு, நம்மை நோக்கி அல்லவா திசை திரும்புகிறது என்று நொடிப் பொழுதில் புரிந்துகொண்ட தவத்திரு குருமகாசன்னிதானம் பொன்னம்பல அடிகள், கூடியிருந்த அவையினரை நோக்கி, "இதற்கெல்லாம் சன்னிதானம் ஒன்றும் செய்யமுடியாது... பள்ளி ஆசிரியர்களும், தலைமை ஆசிரியரும்தான் நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும்!" என்று சுட்டிக்காட்டினார்கள்.

அவையினரும், செக்ரிதுணை இயக்குநரும், பள்ளித் தலைமை ஆசிரியரும் ஆசிரியர்களும், அடிகளின் கூர்மையான நகைச்சுவைப் பதில் உரையை உள்வாங்கி ரசித்துப் பலமாகக் கரவொலி எழுப்பினர்.

– செய்தி. "மு.மு"

> எல்லாம் வல்ல இறைவன் கூட கடந்து போன காலத்தைத் திருப்பி அளிக்க முடியாது. முடிந்துபோன கடந்த காலத்தை மீண்டும் கூப்பிடவோ, நடந்து முடிந்த வேலையை நடக்காதது போல் ஆக்கிவிடவோ, சர்வ வல்லமையுடைய ஆண்டவனாலும், விதியாலும் கூட முடியாது.
>
> – மில்டன்

மக்கள் சிந்தனை

சமய சமுதாய இலக்கிய திங்களிதழ்

சிறப்பாசிரியர் : **தவத்திரு பொன்னம்பல அடிகளார்**

சந்தா விவரம்

தனி இதழ்	ரூ.	8.00
ஆண்டுச்சந்தா	ரூ.	90.00
ஆயுட் சந்தா	ரூ.	1000.00
புரவலர் கட்டணம்	ரூ.	2000.00

சந்தா – விளம்பரம் அனுப்பவேண்டிய முகவரி :

நிர்வாகி

மக்கள் சிந்தனை

குன்றக்குடி – 630 206

சிவகங்கை மாவட்டம்

தொலைபேசி எண் : 04577 - 264227

இந்தியன் வங்கி, பிள்ளையார்பட்டி கணக்கு எண் : 554267544 மூலமும்

மணியார்டர், வங்கி வரைவோலை / காசோலை மூலமும்

அனுப்பலாம்.

ஆதீன இணையதள முகவரி : website : www.kkmutt.org

ஆசிரியர் : **மரு. பரமகுரு**

அச்சிட்டு வெளியிடுவோர் : ஸ்ரீ சண்முகநாதன் அச்சகம், குன்றக்குடி

BOOK POST
Book pocket containing printed matter
MAKKAL CHINTHANAI-May-June 2015

Price Rs. 8-00
Date of Publication 30-6-2015



பெறுநர்

திரு [illegible] அவர்கள்

கோவிலூர் ஆதீனம் கோவிலூர்

மடாலயம்(அஞ்சல்) காரைக்குடி.

அச்சிட்டோர் : சண்முகநாதன் அச்சகம், குன்றக்குடி. ✆ : 264166